1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு ஆவணிமாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை — பிரிதிசதம் 10 | 33-ம் இலக்கம்

## குருத்துவ அழைத்தலின் விதைக்களம்

குருத்துவஅழைத்தல் பூரணமாக விருத்தியடைந்து கனியுமிடம் குருமடமாகில், கிறிஸ்தவ இல்லங்களே அந்த அழைத்தலின் ஆரம்பமும், முதன்முதலாக அது விருத்திபெறவேண்டிய இடமுமென்று சந்தேகமின்றிக் கூறலாம். ஆகவே, ஒரு குருப்பிரசாதியைப் பிறப்பிப்பதில் அகத்தியம் ஈடுபடவேண்டிய இருஅம்சங்கள்: கிறிஸ்தவஇல்லமும், குருமடமுமாகும். உத்தம கிறிஸ்தவஇல்லங்கள் இல்லாதே போனால் என்னநடக்கும்? முதலாவது, குருமடத்துக்குத் தகுதிவாய்ந்த மாணவரைக் கண்டடைவது இயலாக்கருமமாகும. இரண்டாவது, விருத்திபெற்றுக் கனியவேண்டிய எத்தனையோ குருத்துவ அழைத்தல்கள் அழிந்து பாழாய்ப்போகும். அதனாலன்றோ பரிசுத்ததிருச்சபை தனது ஞானப்பத்தாவின் நித்திய குருத்துவத்தை உலகமுடிவுபரியந்தம் நிலைநாட்டுவதற்கெனத் தேவைப்படும் குருப்பிரசாதிகளைப்பெறக் கிறிஸ்தவஇல்லங்களையே பெரிதும் ஆவலுடன் எதிர்நோக்குகின்றது.

திருப்பலிபீட சேவைக்குச் சர்வேசுரன்தெரிந்து புறம்பாக்குகிறவர்களை வழிநடத்தும் பாரதூரமான கடமையைப் பெற்றோர்மேல் அவர் சுமத்தியிருக்கிறார். அவர் மனிதருக்குஅருளும் மகத்தான சுதந்திரங்களில் ஒன்று, தம்முடைய நித்தியஏற்பாடுகளை இவ்வுலகில்கொண்டு நடத்தும்பணியிலே அவர்களைத் தமதுஉடன்முயற்சிக்காரர் ஆக்குவதேயாம். அதனால், இளம்பிள்ளைகளைத் தமதுபலிபீட சேவைக்கு வழிநடத்தும் பணியிலே பங்குபற்றும்படியாகப் பெற்றோரைஅழைக்கின்றார். இந்தக்காத்திரமான பணியில் அவருடன் பிரமாணிக்கமாய் ஒத்துழைப்பதிலேயே அனுகூலம் தங்கியிருக்கிறது. ஒத்துழைக்க வேண்டியவர்கள் செய்யும்தவறாலே ஓர் குருத்துவஅழைத்தல் தவறுமேயானால், அவருடைய நித்தியஏற்பாடுகளும் தவறுமென்றே சந்தேகமின்றிச் சொல்லலாம்.

குருத்துவஅழைத்தல் நன்றாக வளர்ந்து மதாளிக்கச்செய்வதில் பெற்றோர் எவ்வளவோ உதவி செய்யவேண்டும். அவர்கள் வசிக்கும் இல்லங்கள் உண்மையான கிறிஸ்தவஇல்லங்களாய் இருந்துவருமேயானால், அவைகள் குருத்துவஅழைத்தல் என்னும் வித்தானது சேட்டமாய் வளர்ந்து சிறந்த பலனளிக்க எவ்வளவோ உதவியாயிருக்கும். அதற்குப்பதில் அவைகள் உலகப்போக்கும், உலகவெகுமானமும், உலகசம்பத்தில் பற்றுமுடையனவாய்இருந்தால் இளம்பிள்ளைகளின் இருதயங்களில் உதிக்கும் குருத்துவஅழைத்தல் என்னும்முளை மேலோங்கிவளரக்கூடிய பரிபக்குவ சாதனங்களைக் கண்டடையமுடியாது வாடிவதங்கிக் கருகிப்போகும். உள்ளபடியே இவைபோலும் இல்லங்களிலிருந்து உதிக்கும் குருப்பிரசாதிகள் மிகமிகச் சொற்பமேயெனலாம். பெற்றோரின் வேண்டாவெறுப்பாலும், கவலையீனத்தாலும் அழிந்துபோன குருத்துவ அழைத்தல்கள் இம்மட்டென்று சொல்லவியலுமா? இவைகள் உத்தம கிறிஸ்தவ இல்லங்களிலே உதித்திருந்தால், சர்வேசுரனின் திருச்சபைக்கு அணிகலனும், அலங்காரமுமான எத்தனையோ குருப்பிரசாதிகளை உதவியிருக்குமல்லவா?

சூரியகதிர்களின் மென்மையான அனலிலே மதாளித்து மலரும் புஷ்பங்கள்போன்று தேவபக்தியில் ஓங்கிவளரும் உத்தம கிறிஸ்தவகுடும்பங்கள் தேவஇரக்கத்தால் எத்தனையோ உண்டு. இந்தக் குடும்பங்கள் இன்றேல் திருச்சபை தனது ஞானமக்களின் ஆத்துமஇரட்சணியவேலையைக்கொண்டுநடத்தக்கூடியதாய்த் தேவதோத்திரவாஞ்சைநிறைந்த குருப்பிரசாதிகளைக் கண்டடையக் கூடியதாய் இருக்கமாட்டாது. இத்தகைய கிறிஸ்தவகுடும்பங்கள் அதிகமாயிருந்தாலும் அவைகள் இதுகாறும் எடுத்துக்கொண்ட பிரயாசையிலும்பார்க்க இன்னுமதிகம் கூடியபிரயாசை எடுத்துக் குருத்துவ அழைத்தலைப் பன்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

— "புஷ்பம்" —
அர்ச். செபஸ்தியார் பாடசாலை
கரம்பொன்

## ஆசையுடன் வருகிறார்! ஆனால்...

கடவுள் தாராளகுணமுள்ளவர். நம்இரட்சகராகிய கிறீஸ்துநாதர் தம்மிடமிருந்து நாம் பெறவிரும்பும் ஆசீர்வாதங்களையும், கொடைகளையும் நமக்குக் கொடுக்கிறார். இவ்வுலகில் அவர் இருந்தபோது அவரை ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தவர்களிடம் சென்று அதிசயங்களைப் புரிந்தார். மக்கள் மற்றக் காரியங்களிலும், ஆட்களிலும் ஈடுபட்டிருந்தால் அவர் அவர்களை விலகிச் செல்ல வேண்டியிருந்தது. அவர்களின் விசுவாசக் குறையினால், அவர் நீட்டிய கரங்கள் புதுமைகள் செய்யச் சக்தியற்றவைபோல் தோன்றின. அவர் பேசிய வார்த்தைகள் அவர்களுடைய செவிகளில் விழவில்லை.

விருப்பற்று இருந்தவர்களிடம் கிறீஸ்துநாதர் தம்மையோ, தமது கொடைகளையோ திணித்தவர் அல்ல. அவரிலோ, அவர் சொன்னதிலோ, அவர் செய்ய வந்த சாரியத்திலோ சற்றுக் கரிசனை காட்டினவர்களை அவர் சம்பூரணமாய் ஆசீர்வதித்தார். சக்கேயுஸ் நல்ல உதாரணம். ஆண்டவரைப் பார்க்க அவனுக்கு ஆசை. அவர் அவன் இல்லத்தில் உணவருந்தி அவனுடன் தங்கினார். லாசர், மரி, மார்த்தா என்பவர்களின் இல்லத்தில் யேசுவுக்கு என்றும் நல்வரவு அளிக்கப்பட்டது. அவர்களது அன்புக்குக் கைம்மாறாக, மரித்த லாசருக்கு உயிர் கொடுத்தார். மரியம்மாளை ஏழுபேய்களினின்று விடுவித்தார். மார்த்தாளை முதற் கிறீஸ்துவ கன்னியரில் ஒருத்தியாக்கினார்.

அடிக்கடி திவ்விய நற்கருணை உட்கொள்ளுதல் இன்று சாதாரணம். யேசுவை அடிக்கடி அருந்துகிறநாம் "என் இரட்சகர் என்உள்ளத்தில் அடிக்கடி வந்தும் நான் ஏன் அவருடைய வருகையால் மிகப் பயன் பெறாது போகிறேன்?" என நம்மையே கேட்க வேண்டும். அடிக்கடி நன்மை வாங்கப் பாப்பாண்டவர் அனுமதித்திருக்கிறாரே. ஆனால்; ஆயிரத்தில் ஒருவராவது கிறீஸ்துநாதரும், பாப்பாண்டவரும் எதிர்பார்க்கும்நலனை அடைகின்றாரா? சனங்கள் கோவிலில் நுழைகிறார்கள். திவ்விய நற்கருணை கொடுக்கும் நேரம் வந்ததும் நாவை நீட்டி நன்மை வாங்குகிறார்கள். அத்துடன் எல்லாம்முடிந்தது என்றாற்போல் அப்படியே வெளிகிளம்பி விடுகிறார்கள். கடவுள் என்றும் தாராள குணமுள்ளவரே. அவர் ஒருபோதும் மாறமாட்டார். ஆனால், அவரை உட்கொள்ளும் மக்களே அவருடைய கையைக் கட்டுகிறார்கள். அவர் தமது வரங்களை வழங்காதிருக்கும்வண்ணம் நடந்துகொள்ளுகிறார்கள்.

திவ்விய நற்கருணை உட்கொள்வோருக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் நல்ல மேல்வரிச் சட்டம். நன்மை வாங்குவதற்கு முந்திய நாள்முழுவதும் அவர் தம்மைத் தயாரிப்பதில் செலவழிப்பார். நன்மை வாங்கும் நாளன்று பத்தியுடன் மகிழ்ந்து அக்களிப்பார். அடுத்தநாளை நன்றி செலுத்துவதில் கழிப்பார். நம்மவர்கள் மூன்று நிமிஷம் அல்லது மூன்று விநாடி முதலாய்க் கிறீஸ்துநாதரைப் பற்றிச் சிந்திக்கிறார்களா என்பது கேள்வி. திவ்விய நற்கருணையினால் நாம்அடையும் நலன் அதை உட்கொள்ளுமுன் நாம் செய்யும் தயாரிப்பையும், உட்கொண்டபின் கிறீஸ்துநாதரை நாம் உபசரிப்பதையும் பொறுத்தது.

விருந்தாளி வருகையில் அவசியமான சாமான்களை வாங்குவதும், வீட்டைச் சுத்தம் செய்வதும் வழக்கம். வருகிறவர் பெரிய மனிதரானால தயாரிப்பும் அதற்கேற்ப இருக்கும். பணக்கார உறவினர் வருவாரானால் அவருக்குப் பிரியமான தோற்றத்தை இல்லத்திலுள்ளவர்கள் அளிக்க முயல்வர். தனது கணவனின் முதலாளி விருந்துக்கு வருகிறதாயிருந்தால், முகமலர்ச்சியுடன் நல்வரவு அளிக்கப்படும். நாட்டின் தலைவரோ, பேர்பெற்ற தளபதியோ வருவாரானால் தெருக்கள் அலங்கரிக்கப் படுகின்றன.

திவ்விய நற்கருணை வழியாக நமது அரசர் நம்மைச் சந்திக்க வருகையிலோ....? உலக சரித்திரத்திலேயே மிகப் பெரியவரான நசரேத்தூர் யேசு நமது ஆத்துமத்தில் வருகிறார். இராசாதி இராசன் நமது இருதயமாகிய சிம்மாசனத்தில் அமர்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

— D. A. L. —

# சுதேச வர்த்தமானம்



### கல்லூரி ஆரம்பம்

மத்தியகோடைகால விடுமுறை காலம்முடிந்து சம்பத்திரிசியார்கல்லூரி புரட்டாசிமாதம் 1-ந் திகதியாகிய வருகிறசெவ்வாய்க்கிழமைகாலை வழமைபோல ஆரம்பமாகும்.

### குருமார் ஞானஒடுக்கம்

நமது மேற்றிராசனத்தைச்சேர்ந்த வண: குருப்பிரசாதிகளின் முதலாவது பிரிவான ஞானஒடுக்கம் நேற்றுக்காலை முடிவாயிற்று. இரண்டாவதுபிரிவான ஞானஒடுக்கம் நாளை 28-ந் திகதி வெள்ளிக்கிழமைமாலை ஆரம்பமாகி அடுத்த புரட்டாசி 4-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை முடிபாகும். வண. பி. திசநாயக சுவாமியாரே ஞானஒடுக்க போதகஞ் செய்தருள்வார்.

### அடைக்கலமாதாகோவில் யூபிலிவிழா

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே மகாவந. ஜே. ஏ. கியோமார்ஆண்டவரால் முதன்முதலாக அபிஷேகஞ்செய்யப்பெற்றதும், யாழ்ப்பாணநகருக்கு ஓர் அணிகலமாய்த் திகழ்வதுமான பரிசுத்தஅடைக்கலநாயகியின் திருஆலயமானது அபிஷேகஞ்செய்யப்பெற்ற 25-ம் ஆண்டு நிறைவுவிழாவாகிய வெள்ளியூபிலிவிழா அடுத்து நிகழும் புரட்டாசிமாதம் 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை அவ்வாலய திருநாளன்று ஆடம்பரவைபவங்களுடன் கொண்டாடப்படவிருக்கின்றது. இதற்கென அவ்வாலயம் புதுப்பிக்கப்பெற்றுக் கண்ணுக்கினிய காட்சியளிக்கின்றது. திருநாளுக்குமுதனாளாகிய 7-ந் திகதி திங்கட்கிழமைபிற்பகல் 5-30 மணிக்கு நம்மேற்றிராணியாண்டவர் அங்குஎழுந்தருளும்போது சிறந்தவரவேற்பு அளிக்கப்பெற்று, அவ்வாலயத்தைச்சேர்ந்த நான்கு பக்திக்கூட்டங்களிலும் புதியஅங்கத்தவர்களைச் சேர்த்தருளுவார். பின்னர்7 மணிக்கு அவரால் வேஸ்பர்பாடித் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம் அருளப்படும். 8-ந் திகதியாகிய திருநாளன்றுகாலை 7 மணிக்கு ஆண்டவர்அவர்கள் திவ்வியபூசைநிறைவேற்றி உறுதிப்பூசுதல் திருச்சடங்கு நடத்துவார். சாயந்தரம் 4-30 மணிக்குச் செபமாலையின்பின் வேஸ்பர்பாடியதும் பரிசுத்த அடைக்கலநாயகியின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்நடந்து, சற்பிரசாதஆசீர்வாதத்துடன் யூபிலிவிழா முடிபாகும். அடைக்கலநாயகியின் ஆலயம் சிலகாலம் பெற்றக்கினிஆண்டவரின் ஆசனக்கோவிலாகப் பாவிக்கப்பட்டு வந்ததென்பதும், யாழ்ப்பாணப்பட்டணம் தேவதாயாருக்கு நேர்ந்துஒப்புக்கொடுக்கப்பட்ட புரட்டாசி 8-ந் திகதியையே அது தனதுதிருநாளாகக் கொண்டாடிவருகிறதென்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### காரியாதிகாரியின் கண்ணியமதி

நெல்விளைவைப்பெருக்குதற்கென்று அரசாங்கம் தொடக்கிநடத்தும் இயக்கத்திலே அதற்குத் துணைசெய்வது லங்காபிமானிகள் சகலரினதும்கடமையாகும்; அரிசியின் விலையேறியதையிட்டுத் தேநீர்க்கடைகளிலும், தெருக்களிலும் உட்கார்ந்து வீணுகப்பசப்பிக்கொண்டிருப்பதைக்காட்டிலும் தங்களுக்குள்ள தற்போதைய கஷ்டங்களை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்துக்கு உதவிசெய்வதுதான் சிறந்தவழியாகும் என்று . சமீபத்தில் பொல்காவலையைச்சேர்ந்த கொட்டம்புலஎனுமிடத்திலே கிராமசேமவாழ்வு அதிகாரிகள், கிராமத்தலைமைக்காரர், வேல்விதானைமாரின் கூட்டம்ஒன்றில் அப்பகுதிக் காரியாதிகாரியான திரு. பி. எம். தென்னக்கூன் அவர்கள்பேசி உணவுப்பொருள் உற்பத்தியிலே அதிகங்கூடியகரிசனை எடுக்கும்படியாகக் கிராமவிதானைமாருக்கு ஆலோசனைகூறினின்றார்.

### ஆகாயப்பந்தய விமானங்கள்

வருகிறஐப்பசிமாதம் 8-ந் திகதியன்று ஆரம்பமாகவிருக்கின்ற லண்டன்—நியூசிலாந்து ஆகாயவிமானப் பந்தயத்தில் கலந்துகொள்ளவிருக்கும் பதினெட்டுவிமானங்களில் பத்துவிமானங்கள் இலங்கைஆகாயவிமான நிலையங்களைக் கண்டுபோகவிருக்கின்றன. இவற்றில் ஐந்துவிமானங்கள் இரத்மலானை விமானநிலையத்திலும், வேறு நான்குவிமானங்கள் நீர்கொழும்பு விமானநிலையத்திலும், மற்றொன்று இலங்கையிலே இன்னும்அறிவிக்கப்படாத ஓர்நிலையத்திலும்தங்கி எண்ணெய்எடுத்துச்செல்ல விருக்கின்றன. லண்டனுக்கும், நியூசிலாந்திலே பந்தய விமானங்கள் போய்ச்சேரவேண்டிய கிறைஸ்ற்சேர்ச் விமானநிலையத்துக்கும் இடைத்தூரம் 12,270 மைல். இத்தனைஆயிரம்மைல் தூரத்தையும் 24 மணிநேரத்தில் தாண்டிச்செல்லப் பந்தயவிமானிகள் திட்டமிட்டிருக்கின்றார்கள். ஆர். ஏ. எவ். வலியன்ற்விமானம்ஒன்று கராய்ச்சியிலும், கொக்கோஸ்தீவிலுமாக இரண்டுஇடங்களில் மாத்திரந்தங்கிப் பந்தயத்தை முடிக்கவிருக்கின்றது. பந்தயவிமானங்களில் ஒன்று பிரயாணிகளையும் ஏற்றிச்செல்லும். அதிற்செல்லுகிறவர்களின் பிரயாணச்சலார் 302 பவுண்.

### பொலிஸ்நாய்களின் தீரம்

விளக்கமறியலில் இருக்கும்போது பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பியோடியவனை அலடின் என்பவன் ஓர் கொலைக்குற்றச்சாட்டின் பேரிலே சென்ற 17-ந் திகதி திங்கட்கிழமை இரவு கிளிநொச்சியிலிருந்து றெயின் மூலம் குருநாகலுக்கு இருபிஸ்கால் சேவகரால் கொண்டுபோகப்பட்டபோது, மாகோவுக்குச் சமீபமாய் அவன் றெயினிலிருந்து கீழேகுதித்துக் கம்பிநீட்டிவிட்டான். அந்தவேளை அவனுடன்இருந்த ஒரேயொரு பிஸ்கால்சேவகனும் அவனைத்தொடர்ந்து சன்னல்வழியாகக் கீழேகுதித்தபோது அகஸ்மாத்தாய் விபத்துக்குள்ளாகி இறந்துபோயினன். தப்பியோடிய ஆசாமியைத் திரும்பக் கைதுசெய்ய அங்குள்ள பொலிஸால் இயலாமற்போய்விட்டது. அதனால் ‘ரெக்’, ‘பிளாஷ்’ என்ற இரு பொலிஸ்நாய்கள் கண்டியிலிருந்து தருவிக்கப்பெற்று அவைகள் கைதிக்குச் சொந்தமான ஓர் கைலேஞ்சியின் மணத்தைக் கொண்டு பிஸ்கால்சேவகன் இறந்துகிடந்த இடத்திலிருந்து வழிபிடித்து அடர்ந்த காட்டுக்குள் நுழைந்து அங்கே அவன் பொலிஸருக்குப்பயந்து ஏறியிருந்துவிட்டு இறங்கிப்போனமரத்தைக்கண்டு பிடித்து, இரவு அங்குதானே தங்கியிருந்து மறுநாள்காலை அவன்சென்ற தெருவை வழிபிடித்துப் போயின. நாய்கள் துரத்துவருவதையும், அவைகளிடம் தான் அகப்படப்போவதையுமிட்டுப் பயந்த அலடின் அவ்வழியாகவந்த ஓர் பஸ்வண்டியில் சட்டெனத் தொற்றிக் கொண்டான். ஆனால், அவனுடைய பொல்லாத காலத்துக்கு அதிலே அவனை நன்றாயறிந்த தலைமைக்காரன் ஆளைமட்டிட்டுக்கொண்டு தகவல் கொடுக்கவே, அவன்திரும்பவும் கைதுசெய்யப்பட்டுக் குருநாகல் நீதிபதிமுன் சென்ற செவ்வாய்க்கிழமை கொண்டுபோய் நிறுத்தப்பட்டான்.

# தேம்பாவணியும் செபமாலையும்

## களிகூர்ந்தகாரணிக்கம்

### முதற்காரணிக்கம் — 3-ம் பிரியதத்தம்

### 3. இந்த மங்களம் எத்தன்மையானதோ?

பிரியதத்தத்தினுலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர்உம்முடனே; ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்நீரே! என்று சம்மனசானவர்வாழ்த்திய மங்களவாழ்த்துரை கன்னிமரியாளின் காதில்ஒலிக்கிறது. நள்ளிரவின்அமைதியிலே செபத்தியானத்தில் மெய்மறந்த நிலையிலிருந்த அவளுக்கு எதிர்பாராதவிதமான இம்மங்கள வாழ்த்தொலியானது அவள் உள்ளத்தில் மின்னலைப்போன்று ஓர் அதிர்ச்சியை உண்டுபண்ணுகின்றது. எங்கேஇருக்கிறேன்? என்னசெய்கிறேன்? சிலவேளை கனவுதான் காண்கிறேனே? என்றுமுதலாய் ஒருகணம் சிந்திப்பாள்போல் காணப்படுகிறாள். ஆயினும் எதிரிலே சோதிவடிவாய் முழந்தாட்படியிட்டு வணங்கியபடியே தனதுமுகத்தை ஏறெடுத்துநிற்கும் வானதூதனைக் கண்ணோக்கியதும் கனவல்ல, நனவுதான்என்ற முடிபுக்குவருகிறாள். சிலகாலத்தின்முன்னர் மணத்தூது கொண்டுவந்த அதேவானவனே அப்பொழுதும் வந்திருப்பதைக்கண்டதும், “அவர் முக்கியசம்பவம் எதுவுமில்லாமல் என்னிடம் வந்திருக்கமாட்டார்” என்றஎண்ணம் அவள்மனதில் எழுகின்றது. அத்தோடு அந்தத்தூதர் வாயாரவாழ்த்திய வாழ்த்துரையில் அடங்கிய ஒவ்வொருசொல்லையும் நிதானமாகச் சிந்தித்துப்பார்க்கத் தொடங்குகின்றாள். அதன்மகிமையையும், பெருமையையும் உணர்ந்தநிறைபோலும், அவள்திருவதனத்தின் வடிவுவேறுபட்டு நாணத்தால்சிவக்கின்றது. இந்தப்புகழுரை ஏது? நான் ஏது? இதற்குஅடியாள் எள்ளளவேனும் அருகதையற்றவளே என்றெல்லாம் எண்ணியெண்ணி உள்ளம் துடியாய்த்துடிக்கின்றாள். “சர்வேசுரன் சமுகத்திலே அற்பஓர்தூசுக்குத் தானும் சமமாகாத அடியாளைத் தெய்வஅழகியேஎனப் போற்றுதல் தகுமா? எல்லாரிலும் மிகவேசிறியவளாகும் என்னைப் பெரியவளாகமதித்து இப்படியெல்லாம் வாழ்த்துதல் தகுதியாகுமா? அன்றியும் தேவதிருச் சந்நிதானத்திலே தெய்வத்தொண்டாற்றும் பரிசுத்தரான இந்தச்சம்மனசானவரா ஈனஸ்திரீயாகிய என்னை முழந்தாட்படியிட்டு வணங்கிநிற்பது?” என்று இவ்வாறுகத் தாழ்ச்சியின்மிக்க கன்னிகை சிந்தித்தபோது அவள்மனம் ஒருபுறம் தயங்குகிறது.. மறுபுறமோ இந்தவாழ்த்துதல் என்னநோக்கம் பற்றியதாய்இருக்குமோ? இதன் உட்பொருள் யாதாயிருக்குமோ? இதனுற் சம்பவிக்கப்போகிற காரியம் யாதாகுமோ? என்று அறியாதவளாய் “இந்த மங்களம் எத்தன்மையானதோ?” பெரும்புதிராய் இருக்கிறதே; ஒன்றுமாய்எனக்குப் புரியவில்லையே என்று கலக்கமுறுகின்றாள். கலக்கமுற்றாளாயினும் தெளிந்தநீரையுடைய கடலானது கலங்கியபோதிலும் சேறாகாத வாறுபோல, அவளும் மயக்கமுறாது தேறுதலாயிருக்கிறாள். மனவுறுதியையும், தேவநம்பிக்கையையும் கைவிடாதவளாய், “மனக்கலக்கத்தைத் தந்தவரே அக்கலக்கத்தைத் தீர்த்தும்வைப்பாராக” என நினைந்தவளாய்க் கடவுளைப்பார்த்து: “என் ஆண்டவரே! உமதுகட்டளை யாதென அடியாளுக்கு விளக்கமாகச் சொல்லுவீராக” என்று உருக்கமாக மன்றாடுகிறாள். சம்மனசானவரின் வாழ்த்துரைக்குப் பதில்ஒன்றுமே கூறாது, அவர்திரும்பவும் பேசுகிறவரையில் நீண்டமௌனத்திலே நிலைத்திருக்கின்றாள். அவள் மங்களவார்த்தையின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ள அறியாது கலங்கியவகையையும், அவள் கொண்ட தாழ்ச்சியையும்:

“கனிக்(கு)அள(வு) உயர்ந்த கோடு
வளையும்போற் கருணை ஆர்ந்த
நனிக்(கு)அள(வு) எளிமை பூத்த
நறுமையில் பொருவாக் கன்னி
தனக்(கு)அள(வு) அகன்ற ஆசி
சாற்றிய சொல்லை ஆய்ந்த
மனக்(கு)அள(வு) உளைந்து நாணி
வரைந்தஓ வியமே ஒத்தாள்.”

[நனி கருணைக்கு அளவுஎன இயைக்குக — மிக்க நன்மைகளின் அளவாக; நறுமையில் — தேவ வரங்களால்; பொருவா — (யாவரும்) ஒப்பில்லாத; ஆய்ந்த — ஆராய்ந்து சிந்தித்த; உளைந்து — வருந்தி; ஓவியம் — சித்திரப்பாவை;]

என்று வீரமாமுனிவர் விளக்கிய வகை அழகு வாய்ந்ததாகும். பெற்ற வரங்களின் உயர்வாக மிக்கானதாழ்ச்சியுற்றிருந்த கன்னிகை, தேவதூதன் கூறிய புகழ்மொழிகளைக்கேட்டு நாணமடைந்தவளாய்ச் சித்திரப் பாவையைப்போல் அசைவற்றிருந்தாள் என்று புலவர்கூறும் வார்த்தைகள் ஆராயத்தக்கனவாகும். “வரைந்த ஓவியமே ஒத்தாள்” என்கிறார். அதாவது, ஒரு சித்திரப்பாவை எவ்வாறு அசைவற்றுச் செயலற்று நிற்கிறதோ, அதுபோலவே கன்னிமரியாளும் மெய்மறந்து அசைவற்றுச் செயலற்று இந்த மங்களவார்த்தையின் பொருள் இன்னதென விளங்காது ஏக்கமுற்று மௌனமாய் இருக்கிறாள் என்பதாம்.

**பண்டிதர், C. செல்வரத்தினம்**

கன்னிமரியாளிடம் தலைசிறந்து விளங்கிய ஒரு புண்ணியத்தையும் இந்த அழகிய பாவினுல் விளக்குகிறார் புலவர். அன்னாள் பெருமையையும், புகழ்ச்சியையும் வெறுத்துத் தாழ்ச்சியையே தனது அணிகலமாகப் பூண்டவள் என்பதை ஓர் அழகிய உவமையால் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். மரக்கிளைகளின் உச்சியிலே எவ்வளவுக்கெவ்வளவு பழங்கள் பழுத்திருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு அக்கிளை தாழ்ந்து வளைந்து நிற்கும். கனிகளின் பாரமானது கொப்பையும் வளைத்துவிடும். அதுபோலவே கன்னிமரியாளும் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான தேவவரங்களைப் பெற்றிருந்தாளோ, அவ்வளவுக் கவ்வளவாகத் தாழ்ச்சியுடையவளாய் இருந்தாளாம். இந்த உவமையிலிருந்து தாழ்ச்சி என்கிற புண்ணியமானது இலகுவில் அடைதற் கரியதென்றும், ஒருவர் அடைந்துள்ள பரிசுத்ததனத்தின் அளவாகவே அவரிடத்துத் தாழ்ச்சி அமைந்திருக்குமென்றும் நாம் தெரிந்துகொள்ளக் கூடியதாகிறது. ஆதிச்சம்மனசையும், ஆதிமனிதனையும் பரிசுத்த முள்ளவர்களாகக் கடவுள் படைத்தும் அவர்கள் அகங்காரத்தாற் கெட்டுப் போனார்கள். மரியம்மாளோ தான்பெற்ற தேவவரங்களால் அகந்தை கொள்ளாது தாழ்ச்சி மிகுந்தவளாய் அவற்றைச் சர்வேசுரனுக்கே உரிமைப் படுத்திவந்தாள். இவ்வாறு தலையாய புண்ணியங்களுள் தலையானதாகிய தாழ்மையைப் பேரணியாகப்பூண்ட மரியாளைச் சர்வேசுரன் தமது மாதாவாகத் தெரிந்து வானமட்டாய் உயர்த்தத் திருவுளமானார். நாமும் மாதாவின் மாதிரிகையைப் பின்பற்றுவோம்!

— இரண்டாவதுஉலகயுத்தம் முடிந்தபின்னர் தான்எடுத்துக்கொண்ட 382 ஜேர்மன்கப்பல்களையும் மேற்குஜேர்மனிக்குத் திரும்பக்கொடுக்கும் உடன்படிக்கை ஒன்றுக்கு அமெரிக்கவரசு சென்றவியாழக்கிழமை கைச்சாத்திட்டிருக்கிறது.

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாப்பரசரின் நன்கொடை

யப்பான் இராச்சியத்தின் தென்தீவாகிய கியூஷூதீவிலே ஏழுதினங்களாக விடாதுமழை பெய்து ஏற்பட்டவெள்ளப்பிரவாகத்தாலே நூற்றுக்கணக்கான கத்தோலிக்கமக்கள் வீடுவாசலற்று அந்தரிக்கின்றார்கள். திருச்சபைச்சொத்துகள் வெகுவாகச் சேதமடையலாயின. புகுவோக்கா மேற்றிராசனம் வெகுவாக நஷ்டமடைந்துள்ளது. அதனால் புகாஹோறி மேற்றிராணியார் வீடுவாசல்களை இழந்தவர்களுக்கு உதவி செய்யுமாறு கஷ்ட நிவாரண கமிற்றிஒன்றை ஆக்கியிருக்கின்றார். இரண்டாயிரம்பேருக்கு மேல்இறந்தும், காயமடைந்தும், காணமற்போயுமிருக்கின்றனர். இமானூருவிலே கத்தோலிக்கர் எல்லோரும் வீடுவாசல்களை இழந்துபோனார்கள். கோயிலும், கத்தோலிக்க அநாதசாலையும் வெள்ளத்தின்வாய்ப் பட்டன. பரிசுத்தபாப்பரசர் வீடுவாசல்களை இழந்தவர்களின் கஷ்ட நிவாரணத்திற்கென இரண்டாயிரம்பவுண் அனுப்பிவைத்தார். ஆஸ்திறேலியாவிலே சிட்னிநகர் அதிமேற்றிராணியாரான கருதினால்கில்றோய் ஆண்டவரும் மற்றோர்நன்கொடை அனுப்பிவைத்திருக்கின்றார்.

## விடுதலையடைந்த குருமார்

கம்யூனிஸ்த தேசியப்பெருநாளாகிய சென்ற ஆடிமாதம் 22-ந் திகதிக்குமுதனாள் போலிஷ் கம்யூனிஸ்தஅரசாங்கம் 16 குருமாரையும், 3 கன்னியாஸ்திரீமாரையும் சிறையிலிருந்து விடுதலை செய்யும்படி கட்டளையிடலாயிற்று. ஆயினும் இன்னும்எத்தனை போலிஷ் குருமார் சிறைவாசஞ்செய்கிறார்களென்பது தெரியவில்லை. இருவருடங்களின்முன் அவர்கள் தொகை எழுநூறுபேர் வரையிலென மதிப்பிடப்பட்டது. இன்னும் அதிகமென்றும் அறிவிக்கப்பட்டது. தற்போது விடுதலைசெய்யப்பட்டுள்ள 16 குருமாரும் சொற்பகால சிறைத்தண்டனை பெற்றவர்களேயாம். அதனால் இன்னுமே ஒருபெருந்தொகையான குருமார் சிறைச்சாலைகளில் வாடிவருந்துகிறார்கள். இவர்களுடன் கிறாக்கோ நகரபாஸியாக் அதிமேற்றிராணியாரும், மற்றும் ஐந்து போலிஷ் மேற்றிராணிமாரும் சிறைவாசஞ்செய்து வருகின்றார்கள்.

## போலிஷ் குருமந்திரியார்

இரண்டாவது மகாயுத்தகாலத்திலே போலாந்தைவிட்டு வெளியேறியிருந்த போலிஷ் அரசாங்கத்தில் சமய-கல்விமந்திரியாராய்இருந்த வண. சிக்மன்ற் காசின்ஸ்கி சுவாமியார் வார்சோதலைநகரிலுள்ள கம்யூனிஸ்த சிறைச்சாலைஒன்றில் காலஞ்செல்லலாயினர். யுத்தத்துக்குமுன் இவர் போலிஷ்கத்தோலிக்க சமாச்சாரநிலையம் ஒன்றை அடியிட்டு நாஸிகள் போலாந்தை அடிப்படுத்துகிறவரையில் நடத்திவந்து பின்னர் பரீசுக்கும், லண்டனுக்கும் தப்பியோடினார். 1945-ம் ஆண்டு போலாந்துக்குத் திரும்பிச் சென்று "ரைகொட்னிக் வார்சோஸ்கி" எனும் வாரப்பத்திரிகையைத் தொடக்கிக் கம்யூனிஸ்தர்கள்செய்த ஆட்சேபனையையும்பறுவாய்பண்ணாது அதனைப் பேராக நடத்திவரும்போது 1948-ம்ஆண்டு "அரசாங்கத்துக்குமாறான செயல்க"ளில் ஈடுபட்டாரென்று குற்றஞ்சாட்டிக் கைதுசெய்து பன்னிருவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

## நூற்றாண்டுவிழாவும் யப்பானியரும்

ருஷிய சைபீரியாவிலிருந்து கிழக்குமுகமாக 250 மைல தூரத்திலே ஹொக்கைடோஎன்ற காடுமுரடான தீவொன்று இருக்கிறது. அங்குள்ள தீபஸ்தம்பமாதாவின் ஆச்சிரமத்தில் வசிக்கின்ற யப்பானிய "திறப்பிஸ்ற்"சபைச் சந்நியாசர்களும் தங்கள்சபைஸ்தாபகரான அர்ச். பேணாட் பரமபதம் அடைந்த எட்டாம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றார்கள். இந்த ஆச்சிரமம் 1396-ம் ஆண்டு அடியிடப்பெற்று, யுத்தத்துக்கும், அரசாங்கதடைக்கும் ஒருவாறுதப்பி நிலைபெற்றிருக்கிறது. இதிலுள்ள 53 சந்நியாசர்களில் 51 பேரும் யப்பானியர்களே.

## ஓசானம் நூற்றாண்டுவிழா

லண்டன் நகரிலுள்ள மிகப் பெரிய காட்சிநிலையங்களிலே வெஸ்ற்மினிஸ்றரிலுள்ள தோட்டப்பொருட்காட்சிச் சாலையும் ஒன்றாகும். இதிலே நிகழும் ஆவணிமாத ஆரம்பத்திலே பிரித்தானிய சென்வின்சென்ற் டீபோல்சபைத் தேசியமகாநாடு நிகழ்ந்து, அதிலே இச்சபையை அடியிட்டவரான ஆசா. பிறெடறிக் ஓசானம்அவர்கள் பரமபதமடைந்த நூற்றாண்டுவிழா ஞாபகப்படுத்தப் படலாயிற்று. 1853-ம் ஆண்டு மார்சேல்ஸ் நகரில் ஆசா. ஓசானம் மரணம் அடைந்தார். அவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுமாறு பிரித்தானியிலுள்ள சென்வின்சென்ற் டீ போல் சபைக்கூட்டங்களிலெல்லாம் விசேஷசெபங்கள் தொடக்கப்பட்டிருக்கின்றன.

## அர்ச். ஜோர்ஜின் ஆசனக்கோவில்

பிரித்தானியதேசத்திலே கத்தோலிக்க திருச்சபை மறுபடியும் சுதந்திரம் அடைந்தபின் லண்டனிலே கட்டியெழுப்பப்பெற்ற முதலாவது பெரியகத்தோலிக்கஆலயம், சவுத்வாக்கிலுள்ள அர்ச். ஜோர்ஜின் ஆசனக்கோவிலேயாகும். இக்கோவிற் திறப்புவிழாவின்போது நிறைவேறிய திவ்வியபூசையில் பாவிக்கப்பெற்ற தங்கப்பாத்திரம் ஒன்பதாம்பத்திநாத பாப்பானவரால் வெகுமதிசெய்யப்பட்டது. இது 1941-ம் ஆண்டு சித்திரைமாதம் ஜேர்மனியரின் ஆகாயத் தாக்குதல்களாலே பெரிதும் சேதமடையலாயிற்று. இதன் வெளிச்சுவர்களும், கோபுரமுமே சேதமுறாமல் தப்பிக்கொண்டன. இதனைத் திரும்பக் கட்டும்வேலை இம்மாதம் 5-ந் திகதி பனிமாதாவின் திருநாளன்று தொடக்கப்பட்டுள்ளது. யுத்தசேதபரிகாரமாக அரசாங்கம்இதற்கு 1,98,000பவுண் உபகரித்துள்ளது. பிரித்தானியிலே கத்தோலிக்கமேற்றிராணிமாரின் அதிகாரவரிசை திரும்பவும் ஏற்படுத்தப்பட்டபோது வெஸ்ற்மினிஸ்றர் மேற்றிராசனத்தில் போதிய பெரியகோவில வேறொன்றும்இல்லாததால் கருதினால் வைஸ்மன் ஆண்டவர் 1850-ம் ஆண்டு இதிலேயே வரவேற்கப்பெற்றனர்.

# கிறீஸ்தவமும் தமிழும்

(முன் தொடர்ச்சி)

இவர்கள் பலதிறப்பட்டவழியில் தமிழுக்குப் பணிசெய்துள்ளார்கள். தம்புலமையாலும், அறிவாலும் பலநூல்களைஎழுதினார்கள். "திருச்சதகம்", "நன்னெறிமாலை", "இல்லறநொண்டி", "வெல்லைஅந்தாதி" "பாவலர் சரித்திரதீபகம்", "சிற்றம்பலக்கோவை", "உலகசரித்திரம்", "வானசாஸ்திரம்", "தஞ்சைவாணன் கோவை" முதலிய சீரியதமிழ் நூல்கள் இக்காலத்தில்எழுந்தன. தமிழ்வசனநடை இதுவரை மதம்பற்றியதாகவே இருந்தது. இந்தநூற்றாண்டில் அஃது அவ்வரம்பைக்கடந்து வரலாறு, வானசாஸ்திரம்போன்றபொது அறிவியல்விஷயங்களையும் தழுவுவதாயிற்று. இவற்றைஎழுதினவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மானிப்பாய்என்ற ஊரில்வாழ்ந்த சதாசிவம்பிள்ளை என்றகிறீஸ்தவர். இவர் தமிழில் முதன் முதல் உலகசரித்திரம் கண்டவர். முதற் தமிழ்வானநூலும் வசனத்தில்எழுந்தது இவராலேயே. ஸ்ரீமான் நைனியப்பமுதலியாரும் இவர்காலத்திய கிறீஸ்தவப்பெருமான். நாலடி, திவாகரம், சூடாமணிநிகண்டு, வில்லிபாரதம்என்ற விழுமியதமிழ்நூல்களை ஏட்டினின்றும்எடுத்து ஒழுங்காக எழுதிவைத்தார். ஆனால், அவைகள் அச்சேறுமுன்னே உயிர் நீத்தார்.

இவர்காலத்திய மூன்றாம்பெரியார் புதுவையிற்பிறந்தவர். அவர்பெயர்முத்துசாமிப்பிள்ளை. பலமொழிகளில்வல்லுனர். வரலாற்றுவிஷயங்களைக் கண்டுபிடித்துக் கோவைசெய்வதில் மிகுந்தஆர்வம் காட்டியவர். அக்காலத்தில் தமிழ்ஏடுகளைத் தேடி அலைந்த எல். டபிள்யு. எல்லிஸ் என்ற துரைமகனார் இவரால் பெரிதும் உதவிபெற்றார். வீரமாமுனிவரைப்பற்றி முதன்முதல் மதிப்புரைஎழுதியவரும் இவரே. முனிவரது சீவியவரலாறு ஒன்றும் இவர்பேனாமுனையினின்று எழுந்தது.

இனி, தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழ்க்குருமார்பலர். இவர்களிலும் மூவரைப்பற்றி இங்குகுறிக்கின்றோம். இவர்களில்ஒருவர் பவர்என்னும பெயரினர். மற்றொருவர் டெமல்லோ. மூன்றாமவராகத் திகழ்ந்தவர் சற்குணம்என்பார். பவர்ஐயர் தமிழ்நூல்களை ஆராய்ந்ததோடு நில்லாமல், வேறுபாஷைகளில் உள்ள சீரியநூல்களையும் தமிழிலே ஆக்கமுயன்றனர். சீவகசிந்தாமணியின் சிலபகுதிகளை இவர் 1886-ம் வருடத்திலேயே அச்சேற்றினார். ஆங்கிலத்தில் பெயர்பெற்ற Pilgrim's progress என்ற நூலுக்கு "பரதேசியின் மோட்சபிரயாணம்" என்ற தலைப்பிலே தமிழாக்கம்செய்தார். டெமெல்லோஐயர் உயர்ந்தஉத்தியோகஸ்தர் பிள்ளை. இவர் தமதுதந்தையின் பேருபகாரியாய்த்திகழ்ந்த மருதப்பிள்ளையின் பெருமையை "மருதப்பக் குறவஞ்சி" என்ற நூலிலே பாடியுள்ளார். இம்மும்மணிகளில் மூன்றாமவரான சற்குணஐயர் பலநூல்களை இயற்றியவர். இவரே "ரத்னாவளி" என்ற நாடகநூலைஇயற்றித் தந்த முதல்தமிழ் நாடகஆசிரியர்.

இந்தநூற்றாண்டில் மிக்க பெயர்பெற்று இன்றும் மங்காப் புகழ் பெற்றிலங்கும் மூவர்கூடிய மற்றொருகுழுவொன்றும் அக்காலத்தில் இருந்தது. இதைச் சேர்ந்தவர்கள்தான் வேதநாயகம்பிள்ளை, வேதநாயகசாஸ்திரி, சாமுவேல்பிள்ளை எனப்படுவோர். இவர்களைப்பற்றி அறியாதவர் தமிழ்நாட்டில்எவருமில்லை. வேதநாகம்பிள்ளைஎன்றாலே அவருடைய சமரசக்கீர்த்தனைகள் நமதுநினைவுக்கு வருகின்றன. இவரைப்போல் சகலமதத்திற்கும் ஒத்தாற்போல் உருக்கும்மொழியிலே கீர்த்தனை இயற்றியவர்கள் தமிழில்இதுவரை எழுந்ததில்லை. இன்னும் இவர்எழுதியுள்ள "பெண்மதிமாலை", "குணசுந்தரி", "பிரதாபமுதலியார் சரித்திரம்" என்பவற்றைப்பற்றி யாம்இங்குக் கூறவேண்டுவதில்லை. இவருக்கு அடுத்தாற்போல நிற்பவர் வேதநாயகசாஸ்திரி என்போர். இவரது "பேரின்பக்காதல்", "யேசுவின்பேரில் கீதங்கள்", "பெத்லகம் குறவஞ்சி" இன்னும்பிறவும்படித்து இன்புறற்குரியவை. கடைசியாகக்குறித்த சாமுவேல்பிள்ளை சிறந்த தமிழ் இலக்கணநூல்ஒன்றைச்செய்து முடித்தா. இதன்பெருமை அக்காலத்தில்சிறந்தஅறிஞர்எனப் போற்றப்பட்ட புதுவைபொன்னுசாமிபிள்ளை, புரசைஅட்டாவதானம் சபாபதிமுதலியார் என்போரால் பாராட்டப்பட்டது.

இதேசமயத்தில் பலகிறீஸ்தவத் தமிழ்க்கவிஞரும் உதித்தனர். இவர்கள்பலராவர். இவர்களில் மூவரைக் குறிப்போம். ஒருவர் மணப்பாடில் உதித்த அந்தோனிக்குட்டி அண்ணாவியார் என்பவர். மற்றொருவர் அதேஊரில்உதித்த இன்பகவி எனப்படுவர்; மற்றவர் புதுவையிற்தோன்றிய ஸ்ரீமான் சவராயலுநாயக்கர்.

## ஆவணிமாதம்

போதுக்கருத்து:— மணவாழ்க்கையானது சர்வேசுரன் விதித்த சட்டத்தின்படி நடைபெறத்தக்கதாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— ஆஸ்திரேலியாவில் திருச்சபை செழித்தோங்கும்படியாக மன்றாடுவது.

## திருநாள் அட்டவணை

### ஆவணிமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 28 | அ. அகுஸ்தீனர், மே. வேதபா. | (வெ) |
| சனி | 29 | அ. ஸ்நாபக அருளப்பர் தலைவெட்டுண்டதிருநாள் | (சி) |
| ஞா | 30 | இஸ்பிரீத்து ஆகம. பின் 14-ம் ஞாயிறு — அ. ரோசம்மாள், க. | (ப) |
| திங் | 31 | அ. பிறவா நெமூந்தப்பர், து. | (வெ) |

### புரட்டாசிமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| செ | 1 | அ. எசிதியார், ம. | (வெ) |
| புத | 2 | அ. முடியப்பர், இ. | (வெ) |
| வி | 3 | அ. செருப்பியம்மாள், க. வே. | (ப) |

சத்தியவேத

**பாதுகாவலன்**

1953-ம் ஆண்டு

ஆவணி மாதம் 27-ந் திகதி

## வண. ஏ. பிறிக்கார்
### சுவாமிகளின்
## தேகவியோகம்

பண்டத்தெருப்புப் பாத்திமா சேத்திரத்திலும், பிந்த இளவாலை விசாரணைப்பங்கிலும் கடந்த நான்குவருடங்களாகத் துணைக்குரவராயிருந்து, அருந்தொண்டாற்றித் தம்மைஅறிந்தவர்களும், தம்மிடம் பலவித ஆன்ம சரீரநன்மை அடைந்தவர்களுமான சகலரையுமே தமதுஅன்பினுல் ஆட்கொண்டு, ஆன்மஇரட்சணிய தாகமும், தியாகமும்நிறைந்த தமதுஅருஞ்சேவைகளால் அனைவரையுமே தம்பால் கவர்ந்துநின்று, ஓர் உத்தம குருப்பிரசாதியென்றும், பெரியபக்திமானென்றும், உண்மையான ஓர்தேவதொண்டரென்றும் கொண்டாடப்பெற்றுவந்தவரான வண. ஆர். பிறிக்கார்சுவாமியவர்கள் மின்னுமல்முழங்காமல் கருமம்நிகழ்ந்தவாருய், அந்தோ! எண்ணுத — எதிர்பாராதவிதமாய்ச் சென்ற 25-ந் திகதி செவ்வாய்க்கிழமை மரணத்திரையுள் மறைந்தாரென்னும் அமங்கல செய்திகேட்டு அன்னுரெல்லாம் ஆற்ருெணுத் துன்புற்றுக் கலங்கிநின்ற கண்ணருவியான காட்சியை என்னென்றுதான் வர்ணித்தெழுதுவோம்? ஓர் இளங்குரவர்—குருப்பட்டம் பெற்று இன்னுமே ஒருஐந்து வருடந்தானும் பூர்த்தியடையாத ஓர்இளங்குரவர் — எம் மேற்றிராசனத்தில் இன்னும் எத்தனையோவருடகாலம் இரட்சணிய தொண்டாற்றக்கூடிய இளவயசுள்ள — அதாவது 29 வயசு இன்னுமேநிரம்பாத ஓர் இளங்குரவர் — அருங்குணசீலரும், களங்கமற்ற சுத்தமனத்தினருமான ஓர்இளங்குரவர் — இந்தவேளை — அதுவும் "அறுவடையோ அதிகம்; ஆனல், வேலையாட்களோ சொற்ப" மென்ற கவலையெழுந்துள்ள இந்தவேளை அகாலமரண மடைந்தாரே யென்று சொல்லிப் புலம்பாதாரே இல்லையெனலாம்.

வண. ஆர்மன்ட் பிறிக்கார் சுவாமிகள் பிரான்ஸ்தேச லவால்நகரில் 1924-ம் ஆண்டு பங்குனிமாதம் 26-ந்திகதி பிறந்தார். இவர் தமதுதாயாருக்கு அருமையான ஒரே மகனவர். இவர் இரண்டுவயதுப்பாலியராய் இருக்கும்போதே இவருடைய தந்தையார் இறந்துபோக, தேவபக்திமிகுந்த இவருடைய தாயார் வறுமையிற் செம்மையாய், அருந்தியாகங்கள் மத்தியில் அருமைபெருமையாய் இவரைவளர்த்துத் தேவதொண்டுக்கென நேர்ந்துகையளித்தார். ஆனல், இரண்டாவது உலகயுத்தத்திலே இவர் பிரான்சியபட்டாளத்திற் சேர்ந்து யுத்தசேவைசெய்துவரும்போது கைதியாகப்பிடிபட்டு இருவருடகாலம் ஜேர்மனியிலே சிறைவைக்கப்பெற்ருர். ஆயினும், யுத்தம்முடிந்தபின்னர் இவர் பொமான்நகர குருமடத்தில் சேர்க்கப்பெற்று, 1946-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 8-ந் திகதி நித்தியவாக்குத்தத்தம் கொடுத்து, பின்னர் மூன்று வருடங்களின்பின் — அதாவது 1949-ம்ஆண்டு மாசிமாதம் 17-ந் திகதி குருப்பட்டம் பெற்று, அடுத்த ஐப்பசிமாதம்—அதாவது எட்டுமாதங்களின்பின் ஓர் மிஷனரியாக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். சேர்ந்ததும் ஆண்டவரின் சேவைக்கெனத் தமது ஆருயிரைத் தியாகஞ்செய்த ஓர்இளம்வீரனைப்போல் காட்சியளித்தார். தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்ருர். பண்டத்தெருப்புப் பாத்திமாகிரித் திருசேத்திரமே இவரது சேவைக்கு மூதற்களமாயிற்று. அங்கேஇவர் அத்திருசேத்திர பரிபாலனராயிருந்த வண. எச். ஜெஸ்லான்ட்ஸ் சுவாமிகளுக்கு ஓர் வலதுகரம்போல் இருந்துவந்தாரெனில் பின்னர்பேசுவானேன்? அதன்மேல் இவரது சேவையின் இரண்டாவதுகளமும், ஈறாந்தகளமுமாகிய இளவாலையிலே அவ்விசாரணைப்பங்குக்குரவருக்குப் பெருந்துணையாயிருந்து இவர்ஆற்றிவந்த அருந்தொண்டுகளைப் போற்ருதாரில்லை எனலாம். இவரதுதாழ்மையை, தரித்திரவாழ்க்கையை, அமைச்சலை, அயராஉழைப்பை, பரிசுத்தமான சீவியமாதிரிகையை, பயபக்தியான மூன்மாதிரிகையை, கபடமற்றதூயமனதை, மலர்ந்தவதனத்தை, கனிந்த வசனத்தை, தகுந்தவாறு பிரயாசையுடன் ஆயத்தஞ்செய்து சுருங்கச் சொல்லி மனத்தில் அழுந்தவைக்கும் இனியபிரசங்கத்தை, சந்நியாசசீவியத்திற்கு உந்நதமேல்வரிச்சட்டமாகஇவர் விளங்கிவந்ததை, தமக்குள்ள சங்கீதத்திறமை காரணமாகச் செவிக்கின்பம் பயக்கும்படியாகக் கோவிற்சங்கீதம் பரிமளிக்கச் செய்துவந்ததை யெல்லாம் அன்னுர்சிந்தித்து இந்தவேளை சிந்தாகுலத்தராய்நெட்டுயிர்த்து நிற்கின்றனராமே. அம்மட்டா! எனது அருமைமகனே, அடுத்த வருடம் நீர்வந்து எனைச்சந்திப்பீரெனக் காத்திருக்கிறேன் என்று பெருங்காதலுடன் சென்ற ஆடிமாதமே கடிதம் எழுதியிருந்த இவர் தாயார் தனது அருந்தவப்புதல்வர் இறந்துவிட்டாரரென்ற அமங்கலசெய்தியை அறியவந்ததும் அம்மம்ம! எப்படித்தான்மனம் ஆறியிருப்பாரோ?

மரித்தபின் சுவாமிகளின் திருமேனியானது ஆசாரியவஸ்திரங்கள் தரிக்கப்பெற்று, ஆசனக்கோவில் கொண்டுவந்து உயர்மேடையில் வளர்த்தப்படவே, தங்கள்வருடாந்த ஞானவொடுக்கத்துக்குச் சமுகந்தந்த குருப்பிரசாதிகளும், பிறரும் அவருக்குத் தங்கள் கடைசிமரியாதையைத் தெரிவித்து, ஓர் அரிய இளங்குருப்பிரசாதியை இழந்ததையிட்டுப்பிரலாபித்து, அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக இரவிரவாக மன்ருடியவண்ண மிருந்தார்கள். பின்னர் நேற்றுக்காலை நம்மேற்றிராணியாண்டவர் ஆசனக் கோவிலிலே சுவாமிகளின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றி அந்திமதிருச்சடங்குகளை முடித்ததும் ஐம்பதின்மருக்கு மேற்பட்ட குருமாரும், நாற்பதின்மருக்குமேற்பட்ட கன்னிகாஸ்திரிமாரும், குருமடத்து மாணவர்களும், பாடசாலைப்பிள்ளைகளும், மற்றுந்திரளான கத்தோலிக்கமக்களும் புடைசூழப் பெரியஊர்வலமாக அவர்திருமேனியானது சேமக்காலை கொண்டுசென்று, ஆண்டவர் அவர்கள் கடைசிஆசீர்வாதங் கூறிநிற்கப் பெருந்துயரபிரலாபத்துடன் பூமதானஞ்செய்யப்படலாயிற்று.



**R. I. P.**

— ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலே சோவியற் அதிகாரிகளும், கம்யூனிஸ்த கிழக்குஜேர்மன் அதிகாரிகளும் 1945-ம் ஆண்டு சித்திரைக்கும், 1953-ம் ஆண்டுஆனிக்குமிடையிலே சர்வகலாசாலைப் போசிரியர்களும், மாணவர்களுமாக 466 பேரைக் கைதுசெய்து 20 முதல் 25 வருடச் சிறைத்தண்டனை விதித்திருக்கின்ருர்கள். இவர்களில் ஒருதொகையானேர் ஏலவே காலகதியடைந்துவிட்டனராம்.

— லூயிஸ்ஜெனெட்எனும் பெல்ஜிய சுரங்கத்தொழிலாளி ஒருவர் ஐரோப்பாவிலுள்ள பெரிய திருயாத்திரைத்தலங்களைக் கால்நடையாகநடந்து தரிசித்துவருகின்ருர். இவர்சமீபத்திலே ஸ்பானியதேச சறகோசா நகரிலுள்ள தூண்மாதா திருசேத்திரம்போய்ச் சேரலாயினர். சென்றமார்கழி 1-ந் திகதியன்று இவர் பெல்ஜியதேச சாளெரேய்பட்டினத்திலிருந்து தனது யாத்திரையைத் தொடக்கினர். வருகிறஐப்பசியிலேஇவர் ரோமாபுரிபோய்ச் சேரவிருக்கின்ருர்.

## இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்
## 14-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 6: 24—33)

அர்ச். மத்தேயு எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி :— அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது : எவனுகிலும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது. ஏனெனில், ஒருவனைப்பகைத்து மற்ருெருவனைநேசிப்பான். அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்ருெருவனைப் புறக்கணிப்பான். சருவேசுரனுக்கும் திரவியத்திற்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது : உங்கள் உயிர்பிழைக்க எதை உண்போம்என்றும், உங்கள் உடலைமூட எதைஉடுத்திக்கொள்வோம்என்றும், கவலைப்படாதேயுங்கள். உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் மேன்மையானதல்லவா? ஆகாயப்பட்சிகளை நோக்கிப் பாருங்கள் : அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் குவிக்கிறதுமில்லை. ஆகிலும், அவைகளை உங்கள் பரமபிதா போஷித்துவருகிருரே. அவைகளிலும் நீங்கள் மிகவும்மேன்மையுள்ளவர்கள்அல்லவா? மேலும், யோசித்துக்கவலைப்படுவதினுல் தன்உயரத்துக்கு ஒருமுழம்கூட்ட உங்களில் எவனுலே இயலும்? அன்றியும், உடைக்காக நீங்கள்கவலைப்படுவானேன்? வயல்வெளிகளிலுள்ள லீலிப் புஷ்பங்கள் எப்படி வளருகின்றனவென்று கவனித்துப்பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. ஆயினும், சலோமோன்முதலாய்த் தனது சர்வமகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போல உடைதரித்ததில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குச் சருவேசுரன் இத்தன்மையாய் உடைஉடுத்துவித்தால், அற்பவிசுவாசமுள்ளவர்களே, உங்களுக்கு எவ்வளவோ அதிகமாய் உடை உடுத்துவிப்பார். ஆதலால், என்னத்தை உண்போம் அல்லது என்னத்தைக் குடிப்போம் அல்லது எதை உடுத்திக்கொள்வோம் என்று கவலைப்படாதிருங்கள். ஏனெனில், இவைகள் எல்லாவற்றையும் அஞ்ஞானிகள் தேடுகிருர்கள். உங்கள்பிதாவானவரோ இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று அறிவார். ஆகையால், முதல் சருவேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குச் சேர்த்துக்கொடுக்கப்படும் என்று திருவுளம்பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## குருத்துவ அழைத்தலின் விதைக்களம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடங்கு அதிகரிக்கச்செய்ய வேண்டும். குடும்பதலைவனானவன் ஓர் கிறிஸ்தவ தகப்பனென்றமட்டிலே தனது ஞானக்கடமைகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றியும், தனது தொழில் துறைகளை மனச்சாட்சிக்கேற்ப நடத்தியும், குருப்பிரசாதிகள்மட்டிலேமரியாதையாய் அமைச்சலாய் நடந்தும் தன் பிள்ளைகளுக்கு நன்முன்மாதிரிகை காண்பித்தால், அவர்களின் இருதயத்திலே ஆண்டவர் ஒரு பொறியைப்போலப் பொறித்துவிடும் குருத்துவ அழைத்தல் சுடர்விட்டு எரியமாட்டாதா? குடும்பதாயானவள் ஓர் கிறிஸ்தவதாய் என்றமட்டிலே தனதுகுடும்ப கடமைகளைச் சுமுத்திரையாக நிறைவேற்றியும், குடும்பசெபத்திலே மிகுந்த கரிசனையெடுத்தும், தனது பிள்ளையைச் செவ்வனேவளர்த்தும் வருவாளேயானால் அப்பிள்ளையின் நொய்ய இருதயத்திலே ஆண்டவர் ஊன்றிவிடும் குருத்துவஅழைத்தல் பலித்துப்பலுகுவதற்குப் பனிபோலும், அன்பான ஈரம்போலும் உதவமாட்டாளா? கிறிஸ்தவ் சீவியப் போக்குவிரவி, விசுவாசவெளிச்சம்பரவி, கிறிஸ்தவநேச அனல் தாவி, குடும்பசீவிய ஒழுங்கு கதித்துவிளங்கும் ஓர்இல்லத்திலே குருத்துஅழைத்தல் முறைமையாகப் பலித்துப்பலுக வேண்டியதே, திருப்பலிபீட சேவைக்கு அர்ப்பணம்செய்யும்படி தன்னைத்தூண்டியும், குருத்துவஅழைத்தல் தனது ஆத்துமத்தில் கொழுந்துவிட்டு எரியச்செய்தும் தனதுபெற்றோர் எடுத்துக்கொண்ட கரிசனைக்காகத் தான் எவ்வளவுதூரம் கடமைப்பட்டவர்என்பதை ஓர் குருவானவர் பரலோகத்தில் மாத்திரமே சரிவர உணரக்கூடும்.

தங்கள் இடையறாத செபதபத்தினாலும், உத்தம கிறிஸ்தவ புண்ணிய சீவியத்தினாலும், தங்கள் பிள்ளைகளுக்குக் குருத்துவ அழைத்தலைப் பெற்றுக்கொடுக்க முடியுமென்று சில பெற்றோர் எண்ணுவது நியாயமற்ற ஓர் எண்ணமல்ல. கத்தோலிக்க உலகம் அத்துணை மேலாக மதிக்கின்ற குருபதவியின் ஆசீர்வாதங்களைப் பிரமாணிக்கம்நிறைந்த பெற்றோருக்கு ஒரு உபகாரமாகக் கருணை நிறைந்த கடவுள் ஏன் அருளமுடியாது? தாம்நாட்டும் குருத்துவ அழைத்தல் என்னும்பயிர் நிச்சயமாகவே தழைக்குமென்றும், அவ்வித ஓர்பெரிய உபகாரம் உண்மையாகவே மதிக்கப்படும்என்றும் அவர் அறிகின்ற குடும்பத்திலே அவ்வித பயிரைநாட்டுவது சகசமும், நியாயதோரணைக்கு ஏற்றதோர் முடிபுமாகும். அவர் தமதுவிலைமதிக்கமுடியாத குருத்துவ அழைத்தலாகிய விதையைப் பல இடங்களிலும் பரப்பிக்கொண்டு போகும்போது தங்களையும் கட்டாயம் நினைவுகூருவாரென்று உத்தமகத்தோலிக்க இல்லங்கள் நம்பிக்கையுடன் காத்திருக்கக்கூடுமல்லவா?

பரிசுத்த பலிபீடத்திற்கு ஊழியர்களை ஆயத்தம் செய்யும் காலந்தொட்டே அது கிறிஸ்தவ இல்லங்கள் புரியக்கூடிய அதிக மேலான சலாக்கியம் நிறைந்த பணிவிடையாகிறது. இவ்வித பணி திருச்சபைக்குப்பெரும்உதவியும், கடவுளுக்கு எவ்வளவோ உகந்த ஒருசேவையுமாகின்றது. கிறிஸ்தவஇல்லங்கள் இம்மேலான மகிமையைத் தகுந்தபிரகாரம் உணர்ந்து குருத்துவ அழைத்தல்கள் விருத்தியாகிப் பாதுகாக்கப்பட்டுவரச் சாதகமானகளங்களாய் இருக்கும்படி கவனமெடுத்து வருவனவாக!

## பாத்திமா இல்லத் திறப்புவிழா

இளவாலை, பத்தாவத்தைவாசரும், மலாய்நாட்டிலே ஸ்றேஷன்மாஸ்றாராக் கடமைபார்த்து வருகிறவருமான ஸ்ரீ சி. எஸ். நாயகம்அவர்கள் பத்தாவத்தையிலே நவமாகக்கட்டிய அழகான "பாத்திமா ஹோம்" எனும் நிவாசமானது மரியாயின் மாசற்ற இருதயத் திருநாளாகிய சென்ற22-ந் திகதிசனிக்கிழமைகாலை அசாவாநகர் மேற்றிராணியாரும், பாப்பரசரின் சிம்மாசன மகிமைக்காப்பாளருமான மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவரால் ஆசீர்வதித்துப் பாவனைக்குத் திறந்துவைக்கப்பெற்றது. அன்றுகாலை ஆண்டவர்அவர்கள் வண. வி. உக்தின் சுவாமியார் சமேதராய் அங்கு எழுந்தருளவே, ஸ்ரீ நாயகம்அவர்களும், பாரியாரும், பிள்ளைகளும், மற்றும் அன்பர்களும் அவரை வரவேற்றுநிற்க, நாயகம்தம்பதிகள் அவருக்குப் பரிமள புஷ்பாரஞ்சூட்டிப் பூஞ்செண்டளித்து அவரது ஆசிபெற்று நின்றார்கள். அதன்மேல் ஆண்டவர்அவர்கள் வாத்தியவரிசைகளுடன் அப்பதியிலே கோவில்கொண் டெழுந்தருளியிருக்கும் அர்ச். பிலிப்புநேரியாரின் ஆலயத்துக்கு அழைத்துக்கொண்டு போகப்பெற்றதும, வண. உக்தின்சுவாமியார் துணைபுரியத் திவ்வியபூசை நிறைவேற்றினர். அதன்மேல் ஆண்டவர்அவர்கள் வாத்தியவரிசைகளுடன் புதிய இல்லத்துக்கு அழைக்கப் பெற்றுச் சென்று, அதிலே அழகுற அமைக்கப்பெற்றும் பத்திப்பரவசகாட்சிஅளித்து நின்ற சிற்றாலயம்போலும் செபக்கூடத்திலே, போர்த்துக்காலின் பிரஸ்தாபம் பெற்ற சிற்பியால் ஆனைத்தந்தத்தில் கடைந்தெடுத்தவாறாக அரியவேலைப்பாடுகளுடன் செய்யப்பெற்றதும், மனோகவர்ச்சிக்கும், பத்தியருட்சிக்குமுரியதுமான இரண்டுஅடி உயரமுள்ள பாத்திமாநாயகியின் திருச்சுரூபத்தை ஆசீர்வதித்து அதற்குரிய சிம்மாசனத்தில் எழுந்தருளச் செய்தனர். பின்னர் இளவாலைக் கட்டளைக்குரவர் வண. ஹென்றி ஜெஸ்லாண்ட், வண. வி. உக்தின் சுவாமிகள் சமேதராய்ப் புதிய இல்லத்தை ஆசீர்வதித்தனர். அதன்மேல் ஆண்டவர் அவர்களுக்கும், குருப்பிரசாதிகளுக்கும், மற்றும் சமுகமளித்த இனசனர், சிநேகிதர்களுக்கும் பரிமளிப்பான வரவேற்பு உபசாரம் அருளப்படலாயிற்று. அன்றுபகல்முழுவதும் அன்பர்களும், அபிமானிகளும சமுகமளித்து, புதுமனை அளித்துநின்ற அலங்கார காட்சியைப்பார்த்து மகிழ்ச்சியுற்று, ஸ்ரீ நாயகம்தம்பதிகளால் இனிதே உபசரிக்கப்பெற்றுச் சந்தோஷமாகத் திரும்பியவண்ணமிருந்தார்கள்.

— நிருபர்



சதாசகாயமாதா கோணம்

## பிரசித்த நன்றித்துதி

என் அன்பான சதாசகாயமாதாவே! நான் அடைந்த மூன்றுபெரிய சலுகைகளுக்காக உமக்குப்பகிரங்கமாக நன்றியறிந்த தோத்திரஞ்செலுத்துகிறேன்.

நான் ஒருநல்ல, சங்கைமிக்க இந்துமத குடும்பத்தைச் சேர்ந்தவன். சில வருடங்களின்முன் நான் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக்கொண்டேன். கத்தோலிக்க சமயம்ஒன்றே உண்மைச் சமயம்என நான்உறுதியாக விசுவசித்ததின்பயனாய் இந்தமதமாற்றம் ஏற்படலாயிற்று.

சைவசமயத்திலிருந்த எனதுமைத்துனி ஒருத்தியை நான்விவாகஞ்செய்ய வேண்டுமெனப் பேச்சுக்கால் இருந்துவந்தது. சிலகாலத்துள் அவவும் கத்தோலிக்கமதத்தின் உண்மையை அறிந்து அந்தமதத்திற் சேர்ந்துகொண்டா. கத்தோலிக்க சமயஆசாரப்படி, கத்தோலிக்க திருச்சபையின் விதிகளுக்கிணங்க, ஒருகத்தோலிக்க தேவாலயத்தில், ஒரு கத்தோலிக்க குருப்பிரசாதியினால் நமதுவிவாகத்தை நிறைவேற்றுவிக்க நாம் இருவரும் ஆசையாயிருந்தோம். ஆனால், என் மைத்துனியின் பிதாமாதா அதற்குப் பலவிததடைகளையும், தொந்தரவுகளையும் பிறப்பித்துக்கொண் டிருந்தார்கள். நாம் கத்தோலிக்கசமயத்தை விட்டுவிட வேண்டுமென்றும், தவறினால் எங்கள்இருவரையும் நாசமாக்குவதாயும் பயமுறுத்தினார்கள். இதற்கு என்ன செய்வதெனத் தெரியாது அங்கலாய்த்துக்கொண் டிருந்தேன்.

இந்த அங்கலாய்ப்பின் மத்தியில் எனது இடதுகைப்பாரிசம் வாதநோயாற் குத்திவிழுத்தப்பட்டது. இந்த நோய்காரணமாக நான்வகித்த உத்தியோகத்தையும் விட்டுவிடநேர்ந்தது.

இந்த உபத்திரவங்களிலிருந்து நீங்கும்மார்க்கம் அறியாது, என்னசெய்வதெனத் தெரியாது, கையாடக்கூடிய வழிவகை யெல்லாங் கையாடினேன், அனுகூலங்கிடைக்கவில்லை. கடைசியாகச் சதாசகாயமாதாவின் நோவனைப் பத்திமுயற்சியில் பங்குபற்றிக்கொண்டு வந்தேன். மாதங்கள் ஐந்துமுடிந்தன. ஆறும்மாதத் தொடக்கத்தில் என் இடதுகை பூரணசௌக்கியமடைந்தது. இதற்கு ஒருகிழமையின்பின் எனக்குநல்ல உத்தியோகமுங் கிடைத்தது. என்மைத்துனி பகுதியாரின் எதிர்ப்புகளெல்லாம் நீங்கின. சிலநாட்களுள் எங்கள்விவாகமும் வெகுசிறப்பாக நடந்தேறியது.

ஒன்றின்பின் ஒன்றாய் எமக்குநீர்செய்தருளிய இந்தப்பாரிய நன்மைகளுக்கு நான் எவ்விதம் நன்றிசெலுத்துவதெனத் தெரியாதுதயங்குகிறேன். அரியவல்லபம்படைத்த சதாசகாயமாதாவே! எங்கள்இருதயபூர்வமான நன்றியை ஏற்றுக்கொள்ளும். எங்களை இன்றும், என்றும் உம்முடைய அடைக்கலத்தில் வைத்துக் காத்துக்கொள்ளும். எங்கள்இருதயங்கள் உம்மோடு ஒன்றித்திருக்கச் செய்தருளும். அன்பானதாயாரே! நாம் உம்மைவிட்டுப்பிரியும் நிர்ப்பாக்கியம் ஏற்படாதபடியும், நாம்இவ்வுலகில் ஒருவரைவிட்டொருவர் பிரியாதபடியும் பார்த்துக்கொள்ளும். உம்மைஅறியாதவர்கள் உம்மைஅறியப்பண்ண எங்களாலான பிரயாசப்படுவோம். சதாசகாயமாதாவின் புகழ் எங்கும்பரவுவதாக.

[நாவலப்பிட்டியில்இருக்கும் ரி. எம். கனகராசாஅவர்கள் "நோவனைப் புதினம்" எனும்பத்திரிகைக்கு ஆங்கிலத்தில் எழுதியனுப்பிய நன்றியறிந்த தோத்திரத்தின் சாராம்சம் இதுவென்க]

## பிரியாவிடை விழா

இளவாலையில் கடந்த நான்குஆண்டுகளாக அருங்கடனாற்றிய கட்டளைக்குரவர் வண. எஸ். ஜி. ஹில்லறிசுவாமியவர்கள் காத்திராப்பிரகாரம் ஊறணிக்கட்டளைக்குரவராய் மாற்றப்பட்டதையிட்டு இளவாலைமக்கள் பெரிதும் வியாகுலமுற்றார்கள். செபத்திலும், தபத்திலும் தமதுநேரத்தைச் செலவுசெய்து, ஆத்துமவாஞ்சையில் தமக்கு ஈடிணையற்று விளங்கியவரும், இளகிய இருதயத்துடன் இவ்வூர்மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவருமாகிய சுவாமியவர்களின்பிரிவு அவருடைய ஞானமக்களுக்கு மிகுந்தவேதனையளிப்பதாயிற்று. ஆயினும் தெய்வசித்தத்துக்குப் பணிவுடன் இளவாலைக் கிறீஸ்தவர்கள் பெருஞ்சிறப்புடன் அவருக்கு ஒருபிரியாவிடைவிழா நடத்தினார்கள். சென் ஹென்றீஸ் தமிழ்ப்பாடசாலை மண்டபமும், சுற்றுப்புறங்களும் அலங்கரிக்கப்பட்டுத் தேசோமயமான காட்சியளித்தன. சுவாமியவர்கள் குருமனையிலிருந்து வாத்திய வரிசைகளுடன் அழைக்கப்பட்டுவந்து, உயராசனத்தமர்ந்ததும் அங்கு மண்டபம்நிறைந்து பெருகியிருந்த சனக்கூட்டம் எழுந்துநின்று அவரை வரவேற்பதாயிற்று. மலர்மாலைகள் சூட்டப்பட்டதும் அழகிய வாழ்த்துப்பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது. பிரியாவிடைக்கீதங்கள் மனம்உருகிக் கண்ணீர் சிந்தக்கூடியதாய்ப் படிக்கப்பட்டன. பின்பு ஆசிரியர் திரு, எஸ். வஸ்தியாம்பிள்ளை எழுந்து சுவாமியாரிற் காணப்பட்ட அற்புதகுணாதிசயங்களை எடுத்துப்பேசினார். பின்னர் பிரியாவிடைச்சபையின் காரியதரிசி திரு. எஸ். அடைக்கலமுத்துஎழுந்து சுவாமியார் இளவாலைக்குச்செய்த அளப்பருந்தொண்டுகளையும், அவருடைய ஆத்துமவாஞ்சையையும் பலவாகப்புகழ்ந்து பாராட்டினார். இளவாலையில் மகாஞானவொடுக்கம் நடந்தசிறப்பையும், அருமையான மரியாயின்சேனை அடியிடப்பட்டதையும், இன்னும்பலவற்றையும் பேச்சாளர் குறிப்பிட்டனர். ஈற்றில் சுவாமியார் கலங்கிய கண்களுடன் எழுந்து தமக்குச் செய்யப்பட்டவற்றிற்காய் நன்றிகூறி அரியபுத்திமதிகள்உரைத்துநின்றார். கடைசி ஆசீர்வாதத்தோடு பிரியாவிடைவைபவம் பூர்த்தியாகியது.

— நிருபர்

## பெற்றோர்தின விழா

மாதோட்டப்பகுதிப் பாடசாலைகளுளெல்லாம் முற்பட்டதெனச் சொல்லக்கூடியதான பெரியநாவற்குளக் கத்தோலிக்கபாடசாலையில்சென்ற11-ந் திகதி பெற்றார்தினவிழா வட்டாரவித்தியாதரிசி ச. நவரத்தினம் அவர்கள்தலைமையில் நடைபெற்றது. முந்தமாணவரிடையே விளையாட்டுப்போட்டி நடந்து அதிலேவெற்றிபெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. பின்னர் தலைவராலும், ஆசிரியர்கள் பி. ஞானப்பிரகாசம், என். சந்தியாகோ, எஸ். அந்தோனிப்பிள்ளை, பி. சந்தியா குரூஸ், எஸ். மரியாம்பிள்ளை, கிராமவிதானையார் றேசாயில் என்பவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. பின்னர்மாணவர்களின் ஆடல்பாடலுடனும், தலைமைஆசிரியர் வி. ஆர். டொமினிக் அவர்கள் கூறிய நன்றியுரையுடனும்விழாமுடிவுற்றது.

— நிருபர்

— உலகில் மிகச்சிறிய மிருகம் ஷ்றூ என்பது. இது நீளத்திலே ஒரு அங்குலத்திலும் குறைந்தது. ஒரு அவுன்சில் பத்தில்ஒருபங்கு நிறையுள்ளது. ஆறுமணித்தியாலத்திற்குமேல் உணவில்லாவிடின் இது மாண்டுபோய்விடும். இது ஒருநாளில் தனதுநிறையின் நான்குமடங்கு உணவைப் புசிக்கின்றது.



# பாலர் பக்கம்





## அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

தேவதாயாரின் மோட்ச ஆரோபணத்தைக் கொண்டாடிய பின், சென்றசனிவாரம் அவவுடைய மாசில்லாத இருதயத்தின் திருநாளைக் கொண்டாடினோம் அல்லவா?

பாத்திமா தரிசனங்களைப் பற்றி அறியாதார் இல்லை. உங்களைப் போன்ற மூன்று சிறுவர்களுக்குத் தேவதாயார் தரிசனை கொடுத்து, தமது மாசில்லாத இருதயப் பத்தி உலகம் எங்கும் பரம்ப வேண்டும் என்றும், செபமாலை செபித்து மாதத்தின் முதற் சனிக்கிழமைப் பத்தியை அனுசரிக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

இப்பொழுது கத்தோலிக்க வீடுகளில் பாத்திமா மாதா சுரூபமோ, படமோ ஒன்று இருக்கும். அது உங்கள் வீடுகளிலும் உண்டா? அது உங்களுக்கு என்னத்தை நினைவூட்டுகிறது. செபமாலைப் பத்தியை வீட்டில் அனுசரிக்கிறீர்களா? முதல்வெள்ளிக் கிழமைப் பத்தியுடன் முதற் சனிக்கிழமைப் பத்தியையும் சேர்த்து அனுசரிக்கிறீர்களா? உலக பாதுகாப்புக்கு இதுவே வழி. பாத்திமா அன்னையின் வழியே சமாதானம் தரும். சுபம்.

உங்கள் அன்புள்ள
அண்ணா



## யார்?

1

அன்னை தந்தை சுற்றத்தார்
அண்ணன் தம்பி மார்களுடன்
பொன்னும், மண்ணும், பெண்ணும்தம்
புகழும், பேரும் துறந்தோர்யார்?

2

நாடும் நகரும் கைவிட்டே
நாளும், பொழுதும் அயராது
காடும், மலையும் சென்றெங்கும்
கர்த்தன் சேவை செய்வோர்யார்?

3

ஈனப் பாவச் சிறைமீட்பார்
எங்கள் மரணச் சுமைதீர்ப்பார்
ஞானப் பொன்னேர் மொழிகளினல்
நன்னெறி காட்டும் நல்லோர்யார்?

4

தேசம் எங்கும் நாள்தோறும்
திவ்விய பூசைப் பலிசெய்வார்
ஈசன் தமையே போசனமாய்
இனிதே ஊட்டும் புனிதோர்யார்?

5

ஏழ்மை, எளிமை, பாராது
எவரும் தங்கள் மக்களெனத்
தாழ்மை, பொறுமை, அன்புடனே
தருமச் சேவை செய்வோர்யார்?

'ஜெயம்'

## பாலா! கேள்.

1

காலையி லேதுயில் நீத்தவுடன் பாலா!
கர்த்தனைப் போற்றி வணங்கிடுவாய்!
மாலையி லேதந்தை தாயருடன்செப
மாலை செபித்து மகிழ்ந்திடுவாய்!

2

நித்தமும் பூசையே கண்டிடுவாய்! என்றும்
நேர்மையின் வழியே நின்றிடுவாய்!
சத்திய மானவர் தந்தநற் கற்பனை
தன்னையே பற்றி நடந்திடுவாய்!

3

பாடிக் களித்து வளர்ந்திடுவாய் பாலா!
பாவம் விலக்கி நடந்திடுவாய்!
ஆடிக் களித்து வளர்ந்திடுவாய் என்றும்
ஆரோக்ய மாகநீ வாழ்ந்திடுவாய்

4

பெற்ற வரைக்கனம் பண்ணிடுவாய் அன்பாய்ப்
பேணி யன்னாரைப் பணிந்திடுவாய்!
உற்றவரைப் புறந் தள்ளாதே எங்கும்
உத்தமன் என்றுபேர் பெற்றிடுவாய்

5

உண்மையைப் பேசி உயர்ந்திடுவாய்! நிதம்
உத்தம ரோடுற வாடிடுவாய்!
வண்மை படைத்து ஏழைகட்கீந்துநல்
வாழ்வு பொருந்தியே வாழ்ந்திடுவாய்!

6

உத்தரிப் புத்தல மக்களுக்காய் நீயும்
உன்னால் இயன்றதைச் செய்திடுவாய்!
அத்தலத் தோர்க்குநீ ஆறுதல் செய்திடின்
ஆறுதல் உண்டுனக் கென்றறிவாய்

7

நாளும் ஒருபொழு தாகிலும் நாடிநீ
நற்கரு ணைத்திரு நாதாடி
தாழப் பணிந்து வணங்கியே யேசுவின்
தாசனாய் நாளுமே வாழ்ந்திடுவாய்!

8

நன்னிலை பெற்றிட வேண்டுமெனிற் பாலா
நல்லவை நாளும்நீ செய்திடுவாய்!
கன்னியாம் மாமரி காவலிலேஉன்னைக்
கையளித் தப்புவி வாழ்ந்திடுவாய்.

'யுவன்'
கரம்பொன்.

## குருவியும் முட்டைகளும்

இரண்டு துஷ்டப் பையன்கள் ஒரு நாள் ஓர் மரத்தின்மேல் ஓர் குருவிக் கூட்டைக் கண்டார்கள். அப்போது அவர்களில் ஒருவன் மரத்திலேறி அங்கு அடைகாத்த தாய்க்குருவியை மெதுவாகப் பிடித்தான். அதைப் பிடித்ததும் அவன் மற்றவனைப் பார்த்து, நீ முட்டைகளை எடுத்துக்கொள்; நான் குருவியை வைத்துக் கொள்ளுகிறேன்; முட்டைகளும் குருவியைப் போல விலைபெற்றவையே என்றான். அதற்கு மற்றவன், அப்படியானால் நீ எனக்குக் குருவியைக் கொடுத்துவிட்டு முட்டைகளை வைத்துக்கொள் என்றான். இவ்விதம் அவர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் வாக்குவாதப் படுகையில் முந்தியவன் கையிலிருந்து குருவி தப்பிப் பறந்து போயிற்று. அதேவேளை அருகில் இருந்த புற்றினின்று ஒரு நாகம் வெளிப்படக் கண்டதே இருவரும் முட்டைகளைக்கூட எடுத்துக் கொள்ளாமல் பயந்து ஓடவேண்டி வந்தது. இதைப் பார்த்திருந்த தாய்ப் பறவை தன்முட்டைகளை வேறு பத்திரமான இடத்திற்கு அப்புறப் படுத்திற்று. ஆகையால் வீண்வாதம் செய்து கொள்வதால் ஏற்படுவது நஷ்டந்தான்.

பா. சவிரி—மாதகல்

## பெற்றோரின் விருப்பம் அதுதான்

ஜேர்மனியிலே ஒருபெண் பேறுகாலத்தை முன்னிட்டு ஓர்பிரசவ ஆஸ்பத்திரியில் ஏற்றுக்கொள்ளப்பட்டாள். அவளுக்குக் கொடுக்கப்பட்ட அறையில் கிறீஸ்துநாதரின் அழகானபடம் ஒன்று சுவரில் தொங்கியது. அதை எடுத்துவிடும்படி அவள் ஓர் தாதி(நேர்ஸ்)யிடம் சொன்னாள். "அதை எடுக்க எனக்கு உத்தரவில்லை" என்று தாதி கூறினாள். "அப்படியானால் பெரிய டக்றரிடம் சொல்லியாவது அதை எடுத்து விடும்படி ஒழுங்கு செய்" என்று கோபத்துடன் மொழிந்தாள். ஆனால், படமோ அப்படியே இருந்தது. "என்புருஷன் பட்டாளத்தில் பெரியஅலுவல் பார்க்கிறார்; இன்னும் சிலநாட்களில் என்னைப் பார்க்க வருவார்; சரி, அப்போதாவது நான் ஒரு கை பார்க்கிறேன்" என்று அவள் சொல்லிக் கொண்டாள். புருஷன் வந்தான். நடந்ததைக் கேள்விப்பட்டு நேரே பெரிய டக்றரிடம் போனான். "என்னுடைய குழந்தை அந்த யூதனுடைய (கிறீஸ்துநாதர்) உருவத்தைப் பார்க்கவே கூடாதென்பது என் விருப்பமும், என் மனைவியின் விருப்பமும்" என்று அவன் சொன்னான். அவன் இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கையில் ஒருஆள் வந்து அவனுடைய மனைவி ஓர்ஆண் குழந்தையைப் பெற்றதாகத் தெரிவித்தான். ஆனால், குழந்தைக்கு இரண்டுகண்களும் குருடு. அதனால் பெற்றோரின் விருப்பம் பூர்த்தியாயிற்று.

இராசசிங்கம்
டேவிற்றோட், யாழ்ப்பாணம்.

## கதிரை பேசுகிறது

என்பெயர் கதிரை. புனைபெயர் எனக்குக் கிடையாது. மதவாச்சி என்றால் தெரியுந்தானே. அங்குதான் இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் பொன்னையா என்ற தச்சரால் நான் ஆக்கப்பட்டேன். அழகாக என்னைச் சிருட்டித்த அவர் என்னை அங்கு தன்னுடன் வைத்திருக்க மனமற்றவராய் மன்னாருக்குப் புகையிரதமூலம் அனுப்பிவைத்தார். மன்னாரில் ஒரு தனவந்தர் வீட்டில் எனக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. அவருடைய பாதுகாப்பில் நான் சேமமே வாழ்ந்தேன். அவரின் ஏக புதல்வி லீலாவதிக்கு என்னில் அதிக விருப்பம். நான் இல்லாது அவள் இருக்க மாட்டாள். பாடசாலை நாட்களைத் தவிர, ஏனையநாட்களில் புத்தகமும், கையுமாக வந்து என்மீது உட்காருவாள். எனக்கும் அவள்மீது அணைகடந்த அன்பாகிவிட்டது. நான் பேசுகிறேனே என்று உங்களுக் கெல்லாம் சிரிப்புச் சிரிப்பாய் வரும். ஆனால், இன்னும் கேளுங்கள் சொல்லுகின்றேன். ஒன்றின்பின் ஒன்றாய் வருடங்கள் பல ஓடின. நான் பழுதாகி விட்டேன். எனது கால் ஒன்றும் ஆட்டங்கண்டு விட்டது. அதனால் லீலாவதியின் அன்பும் போய்விட்டது. போதாக் குறைக்கு மூட்டைப் பூச்சிகளும் என்னில் வந்து குடிகொண்டு விட்டதால் அவள் என்னை நாடுவதுமில்லை. என்மீது உட்காருவது மில்லை. என் செய்வேன்? எனது சகோதரங்களாகிய நீங்களாவது இந்தவேளை உதவிக்கு வந்து மூட்டைப் பூச்சிகளைக் கொன்று ஆட்டங் கண்டிருக்கும் எனது காலுக்கும் ஆனமருந்துசெய்து எனக்குப் புத்துயிர் அளிக்க மாட்டீர்களா? வணக்கம்.

வி. பிரான்சீஸ்—மன்னார்

## ஆசையுடன் வருகிறார்! ஆனால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார். நமது மூத்த சகோதரராகிய கிறீஸ்துநாதர் நம்மைத் தேடிவருகிறார். அகில உலகையும் ஆண்டு நடத்தும் சர்வாதி கடவுள் என்மேலும், என்னுடையவைகள் மேலும் தமது கவனத்தையெல்லாம் வைத்தவர் போல் என்னை நாடிவருகிறார்.

மனுஷாவதாரத்தின் போது மரியம்மாளிடம் வந்தவரை நான் வரவேற்கிறேன். பெத்லகேம் குழந்தையை அவ்வூர்ச் சத்திரக் காரரைப்போல் நான் துரத்துவதில்லை, ஏற்றுக் கொள்ளுகிறேன். திருக்குழந்தை குளிரால் வருந்தாதபடி சூடான சட்டையைக் கொடுக்கும் இடையன் நான். பாதுகாப்பிடம் தேடி ஓடிய தேவனை வரவேற்கும் எஜிப்து நான். கடவுளுடைய சுதனை வீட்டில் வரவேற்கும் தச்சனாகிய சூசை நான். கிறீஸ்துநாதரைத் தங்கள் இல்லத்தில் இராயப்பர், லாசர் என்பவர்களைப் போல் நான் வரவேற்கிறேன். அரிமத்தேயாவின் சூசையைப்போல் எனக்காக உயிர்விட்ட இரட்சகரை அடக்கம்செய்ய நான் என் இருதயத்தைத் தருகிறேன். கல்வாரிப் பலிக்குப்பின் யேசுவைக் கையிலேந்தும் கன்னிஅன்னை நான்.

விசுவாசம் இருந்தபோதிலும், அது நித்திரைசெய்யும் விசுவாசமாய் இருக்கலாம். திவ்விய நற்கருணை எனது இரட்சகரின் இரத்தமும், சரீரமும் என நான் அறிவேன். எனினும் இந்த உண்மையைப்பற்றிச் சிறிதும் நான் யோசிப்பதில்லை. மணிச் சத்தம் கேட்டதும் எழுந்து கிராதிக்குச்சென்று என் தேவனை உட்கொள்ளுகிறேன். அரசனை வரவேற்கச் சற்றும் தயாராயில்லாத இராச்சியத்துள் அவரை அழைத்துச் செல்கிறேன். தேவ விருந்தாளியின் வரவுக்கு நான் சிறிதென்கிலும்தயாரிப்பதில்லை. அழுக்குப்பிடித்த ஆத்துமத்தில் அவர் நுழையும்படி செய்கிறேன்.

என்னை மகிழ்வித்து ஏராளமான வரப்பிரசாதங்களை நான் அடையச் சந்தர்ப்பம் கொடுக்கும்படி ஆசையுடன் யேசுவருகிறார். ஆனால், என் ஆத்துமம் அவரை வரவேற்று உபசரிக்கத் தயாராயிருப்பதில்லை. அவர்ஒரு நன்மையும் செய்யக்கூடாத நிலைமையில் அவரை நான் வைக்கிறேன். ஏனைய விருந்தாளிகளுக்கு நாம் செய்வதையாவது நமது தெய்வீக விருந்தாளிக்கு நாம் செய்யவேண்டும். குறைக்கவே கூடாது. கூடுதலாகவே இருக்கவேண்டும்.

---

— அமெரிக்க ஐக்கியதேச கத்தோலிக்கதிருச்சபைச் சரித்திரத்திலே முன்னொருபோதுமே இல்லாதவிதமாய் அங்கு அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாருமாய் 193 பேர் இருந்துவருகின்றார்கள். இவர்களில் 4 கருதினால்மாரும், 26 அதிமேற்றிராணிமாரும், 163 குருமாரும் அடங்கியிருக்கின்றார்கள். அத்தேசத்திலே தற்போது 45,222 குருமார் திருத்தொண்டாற்றி வருகின்றார்கள்.

## உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யாதீர்!

தமிழ்மக்களே! பதறாதீர். மனச் சாந்தியுடன் சிந்தியுங்கள்! புலி புலி என்று சில இடையர் பூச்சாண்டி காட்டிப் பலரையும் மடையராக்கினர். அதன்பலனாக ஆவணி 12-ந் திகதி உண்மையில் ஒருபுலிவந்து போயும்விட்டது. இன்னும் காடைப்புலிகளின் இரத்தவெறி தீரவில்லைப்போலும்!

அரசாங்கம் பிறநாடுகளிலிருந்து 86 சதம் கொடுத்து வாங்கிய அரிசியை மக்களுக்கு 25 சதமாகக் கொடுத்துதவியது. ஒருகொத்து அரிசியில் 61சதம் நட்டம்போனதற்கு அது அடையும் இலாபம், மக்களின் நன்றிகெட்டதனமா? சிந்தியுங்கள் அன்பர்களே! இம்முறையில் நட்டமடைந்து கொண்டே போனால் அதன்முடிவு என்னவாகும் என்பதைப் புரட்சிசெய்யும் ஒற்றைப் புத்தியாளர் உணரமுடியாதுதான்.

இங்ஙனம் தான்நட்டமடைந்து மக்களுக்கு அன்னமிட்ட அரசாங்கத்துக்கு நன்றிசெலுத்துவதா? அல்லது அதைக்கவிழ்க்கக் கன்னக்கோல் வைப்பதா தமிழன் பண்பு? அன்னமிட்ட வீட்டிலே கன்னக்கோல் வைக்க எண்ணினாலே அப்பாவிகள் மண்ணாய்ப் போதல் திண்ணம் என்பதை உணர்ந்திருந்தும் தமிழ்ப்போர்வையில் மறைந்து இப்புரட்சிக்கும்பல் செய்யும் அட்டூழியங்களை என்னென்பது!

உண்மையைக்கூறின் அரசாங்கம் 86 சதத்து அரிசியை 25 சதத்துக்கோ அன்றி 70 சதத்துக்கோ விற்பதற்கு எவ்வித நியாயமுமில்லை. வாங்கிய விலைக்கே விற்றிருந்தால் இத்தகைய நன்றிகெட்ட தனத்துக்கு இடமிராதல்லவா?

எத்தனையோ ஏழைகள் 25 சதத்துக்கு அரிசிவாங்கமுடியாது கஷ்டப்பட்டனர் என்பது உண்மை. அவர்கள் 70 சதத்துக்கும் வாங்கார் என்பதும் உண்மை. இவர்களுக்காகக் கண்ணீர்வடிக்கும் முதலைகளை நம்பிப் பலாத்காரத்தில் இறங்குவதுதான் மடைமை!

25 சதத்து அரிசியையே சில்லறை வியாபாரி 1ரூபா 50சதமாக விற்றபொழுது அதுநல்லாய்ச் சீரணிக்குமாம். மூளைக்குங் குளிர்ச்சியாம். அதை அரசாங்கம் 70 சதமாக்கினவுடன் செமியாக்குணம் ஏற்பட்டுவிட்டதாம். வெறிக்குந் தன்மையும் ஏற்பட்டு விடுகிறது! மதிமயக்கத்துக்கும் ஒரு எல்லை இருக்கவேண்டுமே. இரத்தவெறிபிடித்த விஷமிகள் தங்கள் சுயநலத்துக்காக உங்களைப் படுகுழியில் வீழ்த்துமுன் உசாராயிருங்கள். வீண் ஆர்ப்பாட்டங்களில் இறங்காதீர்!


போதுசன நன்மைவிரும்பி—(இ. சா.)

---

— ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு செய்யப்பட்ட மனுக்கள் விஷயமாய் ருஷிய சோவியற்அரசு இத்தாலிக்கு ஐந்து முறையும், இலங்கை, அயர்லாந்து, போர்த்துக்கால், ஜோர்தான் நாடுகளுக்கு மூன்றுமுறையும், ஆஸ்திரியா, பின்லாந்து நாடுகளுக்கு இருமுறையும், கோறியா, நேபால், லீபியா, யப்பான், லாவோஸ், கம்போடியா, வியெற்னம் நாடுகளுக்கு ஒருமுறையும் "இடமில்லை" யெனத் தட்டிவிட்டிருக்கிறது.

— பாப்பரசர் காஸ்ரல் காண்டல்போவிலுள்ள தமதுவேனிற்கால மாளிகையில் தங்கியிருக்கும் இந்தவேளையிலே வத்திக்கானின் தெலிபோன் போக்குவரத்துத் திருத்தவும், விசாலிக்கவும்பட்டு வருகிறது. அடுத்த புரட்டாசியோடு அங்கிருந்துவருகின்ற தெலிபோன்களின் தொகை ஐந்நூறிலிருந்து ஆயிரமாக்கப்பட்டு வத்திக்கான் இராச்சியத்தின் ஒவ்வோர் பிரசைக்கும் ஏறக்குறைய ஒவ்வோர் தெலிபோன் கிடைக்கக்கூடியதாயிருக்கும்.

பாலர்பக்கத் தொடர்ச்சி




கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

(முடியாவிடின் எட்டாம் பக்கம் பாருங்கள்)

## பொது வர்த்தமானம்

### பத்தொன்பதுவருடச் சிறைவாசம்

கார்லோ கோர்பிசியேரோ எனும் இத்தாலியர் இன்னுமே கைவிலங்கு மாட்டப்பட்டவராய்ப் பத்திரிகை ஒன்றில் காட்சியளிக்கின்றார். ஆனால், பத்தொன்பதுவருடம் சிறையில்இருந்த பிறகு நேப்பிள்ஸ்நகர நீதிஸ்தலம்ஒன்றாலே இந்தஆவணிமாதம் 1-ந் திகதியன்று தான்விடுதலைசெய்யப் படவிருக்கிறாரெனக் கேள்விப்பட்டுப் பெருஞ் சிரிப்பாய்ச் சிரிக்கின்றார். கிராமவாசிகள் இருவரைக் கொலைசெய்ததின் பேரில் குற்றவாளியாகக்கண்டு அப்போது இவர் சீவபரியந்த சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தார். இத்தண்டனைவிதிக்கப்பட்டு இருவருடங்களின் பின் இவருடன் சிறையில் வைக்கப்பட்டிருந்த வேறு இருவரில்ஒருவன் சாகுந்தறுவாயில் இருக்கின்றான். சாகுமுன் சிறைச்சாலைக் குருவானவரை அழைப்பித்து அவரிடம் பாவசங்கீர்த்தனஞ்செய்யும்போது இந்தக்கொலைவிஷயமாய்க் கார்லோ கோர்பிசியெரோ உடைந்தையற்றவர்என அறிக்கையிடுகிறான். இதைக்குருவானவர் நீதிஸ்தலத்தில் நிரூபிக்கிறார். ஆனால், அது இந்தவழக்கை மறுபடியும் விசாரணை செய்து, இவரை விடுதலைசெய்யப் 17 வருடம் பிடித்திருக்கிறது.

### இரத்த புரோக்கர்மார்

யப்பானின் தலைப்பட்டணமாகிய ரோக்கியோநகரிலே மனித இரத்த புரோக்கர்மார் மாதம் ஒன்றுக்கு 1 பவுண்முதல் 400 பவுண்வரையில் கமிஷன் அடித்துவருவதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. நகர்வாசிகளான இருபதினாயிரம் மக்கள் இவர்களைத் தரகர்களாகக்கொண்டு தங்கள் இரத்தத்தை மாதந்தோறும் கிரமமாக விற்றுவருகின்றனர். இந்தத் தரகர்களின்தொகை அதிகரித்து வருவதையிட்டு நகரஅதிகாரிகளுக்குப் பெரிதும் அச்சமேற்பட்டிருக்கிறது. ஏனெனில், இரத்தம்விற்பாருள் நூற்றுக்குத் 90 விகிதமானோரும் மாணவர்களே. இவர்கள் கலாசாலைகளில் தங்கள் கல்விச் செலவைச் சமாளிக்கமுயன்றே அவ்வாறுசெய்கின்றார்கள். ஆனால், இரத்தம் விற்பாருள் பலவிதநோய்களால் பீடிக்கப்பட்டவர்களும் இருப்பதாலே நோயாளருக்கு நோயாளரின் இரத்தத்தைச் செலுத்துவது பெருங்கெடுதியாக முடிகிறதாம்.

### இஸ்ரூயேலும் ஜெருசலேமும்

ஜெருசலேம் நகர்ப் பகுதியானது ஐக்கியநாடுகளின் ஆதீனத்தில் விடப்படவேண்டுமென்று ஐக்கியநாடுகளின் பொதுச்சபை 1948-ம் ஆண்டு தீர்மானித்தது. ஜெருசலேமையும், அதனைச் சூழவுள்ள இடங்களையும் சர்வதேசங்களுக்கும் பொதுவானதாய் இருக்கச் செய்யவேண்டும்; திருஸ்தலங்களைப் பாதுகாப்பதற்கான ஒரேயொரு உத்தரவாதம் அதுதான்என்று வத்திக்கானும் திரும்பத்திரும்ப எடுத்துக்கூறியது. ஆனால், ஜெருசலேம்நகர திருஸ்தலங்களைச் சர்வதேசமேற்பார்வையில் விடுவதற்குச் சம்மதிக்க இஸ்ரூயேல் யூதஅரசாங்கம் தயாராயிருந்தபோதிலும் ஜெருசலேமைச் சர்வதேசங்களுக்கும் பொதுவானதாக்குவதை அதுமுற்றாக எதிர்த்து நிற்கின்றது. திருஸ்தலங்களைச் சர்வதேச மேற்பார்வையில் விடச் சம்மதிக்குமிடத்தும் அது இருநிபந்தனைகளைக் கேட்டிருக்கின்றது. அவற்றில்ஒன்று, மேற்பார்வையிடுவதானது இஸ்ரூயேலின் தலைநகர்என்றமட்டில், அல்லது அதன் ஆட்சிமட்டில் ஜெருசலேமின் நிலைமையை மாறுபடுத்தக் கூடாதென்பது. மற்றது, நகரிலுள்ளஆராபிய பகுதிகளிலும் அந்தமேற்பார்வை இருக்கவேண்டும் என்பது.

### கோறியயுத்த அனர்த்தம்

1950-ம் ஆண்டு ஆனிமாதம் 25-ந் திகதி ஆரம்பமாகி நிகழும் 1953-ம் ஆண்டு ஆடிமாதம் 27-ந் திகதி நின்றுபோன கோறியயுத்தத்தால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களோ இம்மட்டன்று. அதன்விளைவாகத் தென்கோறியாவில் ஒருகோடிமக்கள் வீடுவாசல்களை இழந்தனர். 1 லட்சத்து 80 ஆயிரம் தென்கோறிய போர்வீரர் உயிரிழந்தனர். யுத்தத்தினால் ஏற்பட்ட பீடைகளாலே தென்கோறியாவில் 40 லட்சம்சனங்கள் மடிந்துபோயினர். வடகோறியாவிலே போராலும், நேசநாடுகளின் விமானங்களும், போர்க்கப்பல்களும் பொழிந்த குண்டுமாரியாலும் பட்டணங்கள், கிராமங்கள், போக்குவரத்துப் பாதைகளெல்லாம் பாழாயின. கம்யூனிஸ்தவீரர்களில் உயிரிழந்தவர்களும், காயமடைந்தவர்களும் பதினைஞ்சுலட்சம்பேரென்றும், நேசநாடுகளின் படைவீரர்களில் உயிர்துறந்தவர்களும், காயமடைந்தவர்களும் ஐந்துலட்சம்பேரென்றும் மதிப்பிடப்படுகிறது.

## 7-ம் பக்கப் படவிளக்கம்

**1-ம் படம் :**

இதைப் பார்த்ததும் இந்தப் பாட்டா உடுத்திருக்கும் உடுப்பு, வாயில் வைத்திருக்கும் சுருட்டு, அவரது செயல் ஆதியவற்றைக் கொண்டு அவர் ஒரு முசிப்பாற்றிப் பேர்வழி என்று எளிதில் ஊகித்துக் கொள்ளலாம். அவர் தனது வீட்டில் ஓர் சுண்டெலியைக் காணுகிறார். அவரது முசிப்பாற்றி மூளை வேலை செய்கிறது. சந்தடி இல்லாமல் பதுங்கிப் பதுங்கிச் சென்று ஒருசிறு தொட்டியால் அதை மூடப் போகிறார்.

**2-ம் படம் :**

இதில் அவர் எட்டி எட்டிப் போய் எப்படியோ எலியை அச்சிறு தொட்டியால் மூடி விடுகிறார். ஆனால், அதற்குள் அகப்பட்ட எலி தப்பிஓடத் தெண்டிப்பது தெளிவாகத் தெரிகிறது.

**3-ம் படம் :**

அத்தருணம் தளத்தைத் துடைத்துத் துப்புரவுசெய்ய வேலைகாரப் பெண் வருகிறாள். தொட்டியால் மூடி வைக்கப்பட் டிருக்கும் பொருள் என்ன என்று அவரை வினவுகிறாள். அவர் அதற்குள் அழகான ஒரு பறவை இருக்கிறது என்றும், அது பறந்து விடாதபடி அத்தொட்டியை மெல்லத் திறந்து அதைப் பிடித்துப் பத்திரமாக வைத்திருக்கும் படியும் சொல்லிவிட்டுப் போக எத்தனிக்கிறார்.

**4-ம் படம் :**

அவள் மெல்லெனத் தொட்டியை நீக்கிப் பறவையைப் பிடிக்க முயலும் போது அதற்குள் அவதிப்பட்ட சுண்டெலி அவளின் விரலைக் கடிக்கிறது. அவள் அலறிப் புடைத்துக் கொண்டு விழவே, தொட்டி புரள, சுண்டெலி மேலே பாய்கிறது. அவளுடைய பயத்தை அவளின் கைகளும், வாயும், முகமும்; மயிரும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. வேலைக்காரியின் திட்டைக் கேட்க விரும்பாத முசிப்பாற்றி எசமான் கம்பி நீட்டுவதைப் படத்தில் பார்க்க.

## ஸ்பானியரும் — — ஜிப்ரோல்ற்றரும்

ஸ்பெயினின் தென்கோடியிலுள்ள ஜிப்ரோல்ற்றர் குன்றும், அதையடுத்துள்ள துறைமுகமும் 1704-ம் ஆண்டு முதல் பிரித்தானியின்வசம் இருந்து வருகின்றன. ஜிப்ரோல்ற்றர் மத்திய தரைக்கடலின் குறுகியமேற்குவாயிலில் அமைந்திருப்பதால் அதுமிகவும் இராணுவ முக்கியத்துவம்வாய்ந்த கேந்திரஸ்தலமாகும். இது பிரித்தானியர்வசம் இருந்துவருவதைப்பற்றிக் கடந்தபலவருடங்களாக ஸ்பானியர் முறையிட்டதில்லை. ஆனால், 17 வருடங்களுக்குமுன் நடைபெற்ற ஸ்பானிய உள்நாட்டுக் கலகத்தின்போது பிரித்தானியரில் பெரும்பகுதியினர் ஸ்பெயினை ருஷியாவுக்கு அடிமையாக்கத்தேடிய ஸ்பானிய கம்யூனிஸ்தார்களிடம் அனுதாபம்காட்டித் தேசவிடுதலைக்காகப் பாடுபட்ட தேசியவாதிகளைக் கண்டபடி தூஷித்துவந்ததன் பயனாக ஸ்பானியருக்குப் பிரித்தானியர்மீது வெறுப்புஏற்பட்டுவந்தது.

ஆயினும், இரண்டாவது உலகயுத்தத்தின்போது ஹிற்லர் பிரித்தானியைத்தாக்கத் திட்டம்வகுத்து, ஸ்பெயினில் இராணுவதளங்கள் அமைத்துக்கொள்ள ஜெனரல்பிராங்கோவைக் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். இதைப் பிரித்தானியபிரதமர் சேர்ச்சிலும் பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறிப் பிரித்தானியதேசம் ஸ்பெயினுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளதுஎன்று குறிப்பிட்டார். ஆயினும் மதவெறிகொண்ட பிரித்தானியர் சிலர் இன்றைக்கும் பிராங்கோவின் அரசாங்கத்தின்மீது அவதூறுபேசிய வண்ணமாகவே இருக்கின்றனர். எனவே ஸ்பானியர் பிரித்தானிய அரசாங்கத்தின்மீது இன்னும் அதிக வெறுப்புக் கொண்டிருப்பது நூதனமல்ல.

ஜிப்ரோல்ற்றர் ஸ்பெயினுடன் ஒருகுறுகிய பூசந்தியால் இணைக்கப்பட்டுள்ளது. இப்பூசந்தி ஒன்றரைமைல் நீளமும் முக்கால்மைல் அகலமுமுள்ளது. ஜிப்ரோல்ற்றர்குன்றின் மிக உயர்ந்தபகுதி சுமார்1400 அடி உயரமுள்ளது. இக்குன்றின் முக்கியத்துவத்தை எட்டாவது நூற்றாண்டிலேயே சாரசேனிய (முகமதிய) இராணுவவீரனாகிய தாரிக்என்பவர்உணர்ந்து அதில் பலமானகோட்டைஒன்றை 711-ம் ஆண்டு அமைத்தார். 1462-ம்ஆண்டு ஜிப்ரோல்ற்றர்கோட்டையை ஸ்பானியர் மகமதியரிடமிருந்து கைப்பற்றி, அதைஇன்னும் அதிகபலமான கோட்டையாகத் திருத்தியமைத்தனர். 1704-ம்ஆண்டு ஆங்கிலேயரும் உலாந்தாக்காரரும்சேர்ந்து தாக்கி அதைக்கைப்பற்றினர். 1713-ம்ஆண்டு கையொப்பமான உட்றெக்ட்நகர் ஒப்பந்தத்தின்படி அது பிரித்தானியர்வசமாயிற்று.

## மூதூரில் கலைவிழா

மூதூர் அர்ச். அந்தோனியார் கலாசாலையின் கலைவிழா சென்ற 14ம், 15-ந் திகதிகளில் சிறப்பாகநடந்தேறியது. 14-ந்திகதி பி. ப. 3 மணியளவில் மூதூர்க் கிராமக்கோட்டுநீதிபதி திரு. சந்திரசேகரம்அவர்கள் கலாசாலை மைதானத்தில் தேசியக்கொடியைப் பறக்கவிட்டு விழாவை ஆரம்பித்து வைத்தார். மாணவிகளால் தேசியகீதம் பாடப்பட்டபின் கலாசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி ஆரம்பமாயிற்று. பெற்றோரும், நண்பர்களுமுட்பட ஏராளமான சனங்கள் மைதானத்தில் குழுமி விளையாட்டுகளைப்பார்த்தனர். 15-ந் திகதி பி. ப. 6 மணி தொடக்கம் பரிசளிப்புவிழா நடைபெற்றது. கப்ரின்மேஜர் எல்லவலை தலைமைவகித்தார். கலாசாலைஅறிக்கை வாசிக்கப்பட்டபின் டக்றர் நிக்கலே அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. பின்னர் கதம்பநிகழ்ச்சிகள் நடைபெற்றன. கொய்யாத்தோட்டக் கொலை, டைமன்பிரபு என்ற இருநாடகங்களும் நவீனஅரிச்சந்திரன் என்ற ஹாஸ்யநாடகமும் அவற்றின் தரத்தை உயர்த்தக்கூடியனவாயிருந்தன. கொட்டியாபுரக் காரியாதிகாரி திரு. நவரத்தினராசா பெற்றோரின்சார்பாகக் கலைவிழாநிர்வாகிகளைப் பாராட்டியபின் விழா இனிதே முடிவுற்றது.

— நிருபர்

## பொதுவர்த்தமானம்

### பெரிய ஆகாயப்பந்தையம்

நியூசிலாந்திலிருந்து பிரித்தானிய தேசதத்துக்கு வருகிற ஐப்பசிமாதத்திலே பெரிய ஆகாயப்பந்தையம்ஒன்று நடந்தேறவிருக்கின்றது. இதில்வெற்றியடையும் ஆகாயவிமானம் 29,000 பவுண் பரிசாகப் பெற்றுக்கொள்ளும். இப்பந்தையத்தில் ஓர்பெண்மணியையே விமானியாகவும், பெண்மணிகளையே பணியாளராகவுங்கொண்டு ஆஸ்திரேலியவிமானம்ஒன்றும் கலந்துகொள்ளும். இது டாக்ளஸ் டிசி-3-டகோட்ராவிமானமாகும். இப்பந்தையத்தில் கலந்துகொள்ளும் விமானங்களில் பெண்விமானியால் செலுத்தப்படுவதும், பெண்மணிகளால் கொண்டுநடத்தப்படுவதுமான ஒரேயொருவிமானம் இதுவாகும். இதனைத் திருமதி டையனு பிக்ஸ்பை எனும் அமெரிக்கமாது தான் செலுத்துவாள்போல் இருக்கிறது.

### தென்கோறியாவின் பலம்

1950-ம் ஆண்டு ஆனிமாதம் 23-ந் திகதி வடகோறிய கம்யூனிஸ்த படைகள் தென்கோறிய குடியரசுநாட்டின் மேல் படையெடுத்தபோது, தென்கோறியஅரசு25,000போர்வீரரையே கொண்டிருந்தது. இவர்களும்போதிய சிறந்த ஆயுதபாணிகளாய் இருக்கவில்லை. ஆனால், சென்றமார்கழியிலே தென்கோறியஅரசு சுமார் நாலரை லட்சம் போர்வீரரைக்கொண்ட பதினான்குபடைவகுப்புகளைக்கொண்டிருந்தது. இன்றோ அது சிறந்தஆயுதபாணிகளாய்ஐந்துலட்சம்பேருக்கு மேற்பட்ட போர்வீரரைக் கொண்டதாய்க் கோறியாக்குடாநாட்டுக்குக் குறுக்காயுள்ள 150 மைல் நீளமான போர்முனையிலே முக்காற்பாகத்திலும் அவர்களைநிறுத்தி வைத்து யுத்தத்தை நடத்திவரலாயிற்று.


# சிலோன்


இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

இலங்கையரின் முதலாவது
இன்ஷூரன்ஸ் கம்பெனி
முதன்மையாகவே இன்னும் விளங்குகிறது.

* * *

ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி
செய்யக்கூடிய பொலிஸி!

ஒவ்வொருவரின் தேவைக்கும் தகுந்ததான
பொலிஸி!



தலைமை ஆபீஸ் : 69, ராணி வீதி, கொழும்பு
டெலிபோன் : 6241, 6242, 6243.

கிளைகள் :

காலி அம்பலாந்தோட்டை மட்டக்களப்பு
கண்டி யாழ்ப்பாணம் சிலாபம்
களுத்துறை நீர்கொழும்பு நூரேலியா
மாத்தறை பதுளை ரத்னபுரி குருனகலை

மொத்த மூலதனம் 75 லட்சம் ரூபா

**தி சிலோன் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்.**

கீழ்க்கண்ட இன்ஷூரன்கள் இயற்றப்படும் :
ஆயுள், தீ, மோட்டார், பொதுநஷ்டஈடு,
கப்பல்சேதம் முதலியன
சேவையின்மூலம் பாதுகாப்பளிப்பது.


✝

13-ம் வருட

## மரண ஞாபகம்

உலகின் எட்டுத்திசையும் அருள் மாரிபொழிந்து எங்கெங்குமேவணங்கப் பட்டுவரும் அர்ச். பிலோமினம்மாள் தனக்கொருதனிஆலயத்தை யாழ்ப்பாணத்திலே முகமாலை என்னும் திருப்பதியில் நிறுவியருளச் சித்தமானார். அவ்வித திருக்கோவில் உண்டாவதற்குத் துணைக்காரணமாக இருந்தவர், மிருசுவில் எஸ். என். சாமுவேல் அவர்களின் புத்திரியான திருமதி. மேரி பிலோமினாஇராசாத்தி என்பவராகும். அவர் இறைவன் திருவடிசேர்ந்த 13-ம் ஆண்டுநிறைவு நிகழும் ஆவணிமாதம் 29-ம் திகதியாகும்.

### விருத்தம்

மலையினிலே ஏற்றிவைத்த மணித்தீபம் [போல்
மாமகளே நீயிருந்து மறுமை செல்ல
வலையினிலே தவிக்கின்ற புறாக்கள்போல
வருந்திநிற்கு மும்தரிய பெற்றோர்மற் [றோர்
நிலையினிலே பிறழாது முத்திசேர
நேசமிகு நும்பெயரால் நிறுவிஎன்றும்
நிலைபெறுநன் முகமாலை நிலவுசுத்த
நேரிளையாம் பிலோமினாவை வேண்டு [வீரே!

மிருசுவில் —பெற்றோர்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 27-1953